# நோய் நிவாரணி

## பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி

# இருபத்தி ஐந்தாவது மின்னல

(இருபத்தி ஐந்து நிவாரணிகள் இதில் அடங்கும்)

(இது நோயாளிகளுக்கான ஒரு மருந்தாகவும் ஒரு ஆறுதலாகவும் ஒரு ஆன்மீக நிவாரணியாகவும் ஒரு சுகம் விசாரிப்பாகவும் ஒரு பிரார்த்தனையாகவும் எழுதப்பட்டுள்ளது.)

**நினைவூட்டலும் மன்னிப்புக் கோரலும்**

இந்த ஆன்மீக நிவாரணியானது ஏனைய அனைத்து ரஸாஇல்களை விடவும் வேகமாக[1] எழுதப்பட்டதோடு பிற ரஸாஇல்களைப் போல் கவனத்தோடு மீள்வாசிப்பு செய்ய நேரம் கிடைக்காமையால், எழுதிய அதே வேகத்தில் வெறுமனே ஒரு முறை மீள் வாசிப்பு செய்யப்பட்டது. உள்ளத்தில் இயல்பாகத் தோன்றிய உதிப்புக்களை, அதீத கவனம் மற்றும் ரசனை என்பவற்றைக் கொன்டு சிதைத்து விடாதிருப்பதற்காக புதிதாக ஒரு மீள்வாசிப்புக்கான தேவையை நாம் உணரவில்லை. இதை வாசிக்கும் கண்ணியவான்கள், விஷேடமாக நோயாளிகள் சில விரும்பத்தகாத பிரயோகங்கள் அல்லது கடினமான வார்த்தைகள் காரணமாக அலுப்புத்தட்டி வெறுக்காதிருப்பார்களாக! எனக்காகவும் துஆ செய்து கொள்ளுங்கள்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلَّذِينَ اِذَا اَصَابَتْهُمْ مُصِيبَةٌ قَالُوا اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُونَ * وَالَّذِى هُوَ يُطْعِمُنِى وَيَسْقِينِ * وَاِذَا مَرِضْتُ فَهُوَ يَشْفِينِ

இந்த மின்னல் மனித குலத்தின் பத்தில் ஒரு பகுதியை உள்ளடக்கியிருக்கும் கஷ்டத்தில் வீழ்ந்திருக்கும் நோயாளிகளுக்கான உண்மையான ஆறுதல்களையும் பயன் மிக்க மருந்துகளையும் கொண்ட இருபத்தி ஐந்து நிவாரணிகளின் சுருக்கமான தெளிவுரையாகும்.

**முதலாவது நிவாரணி**

அநாதரவான நோயாளியே! ஏக்கப்படுவதை நிறுத்தி பொறுமையை கைக்கொள். உனது நோயானது உன்னை நிர்க்கதிக்குள்ளாக்க வந்ததல்ல, மாறாக அதுவே ஒரு நிவாரணியாகும். ஏனெனில் வாழ்க்கையானது செலவழிந்து கொன்டிருக்கின்ற ஒரு மூலதனமாகும். அதன் கனிகள் பெறப்படாதவிடத்து நஷ்டமே எஞ்சும். அத்தோடு நிம்மதியும் பொடுபோக்குத்தனமும் சேர்ந்து கொண்டால் அந்த மூலதனம் மிக விரைவாக செலவழிந்து விடுகின்றது. நோய்நொடிகளானது உனது அந்த மூலதனத்தை பெரும் இலாபங்களோடு கனிமயமாக்குகின்றது. மேலும் வாழ்க்கை விரைவாக கடந்து செல்வதை தடுத்து அதன் கனிகளைப் பெற்றுக் கொள்ளும் வரை நீளமாக்குகின்றது. ஆம், ஆயுள் நொய்நொடிகள் காரணமாக நீளமாகின்றது என்பதை குறிக்கும் விதமாக ‘‘கஷ்ட காலம் நீண்டதாகும், மகிழ்ச்சியான காலம் குறுகியதாகும்’’ என்ற முதுமொழி நாவுகளில் பொன் மொழியாக மாறியிருக்கின்றது.

**இரண்டாவது நிவாரணி**

பொருமையிழந்த நோயாளியே! பொறுமையைப் பற்றிக்கொள், இல்லை அதற்கும் மேலால் ஒரு படி சென்று படைத்தவனுக்கு நன்றி செலுத்து. உனது இந்த நோயானது ஆயுளில்

---

[1] : ஆம், இந்த ரஸாஇல் நான்கரை மணித்தியால கால இடைவெளியில் எழுதப்பட்டது. – ஒப்பம் ருஷ்து, ர.ாபத், ஃஹஸ்ரவ், ஸஈத்

கழிந்து கொன்டிருக்கும் ஒவ்வொரு நிமிடங்களையும் ஒவ்வொரு மணித்தியால வணக்கம் என்ற அந்தஸ்திற்கு உயர்த்தக் கூடியதாகும். ஏனெனில் இபாதத் இரண்டு வகையாகும். ஒன்று: தொழுகை, நோன்பு போன்ற நாம் அறிந்து வைத்திருக்கின்ற நேர்முக இபாதத்களாகும். மற்றையது மறைமுக இபாதத்களாகும். அதாவது நோய்நொடிகள் இழப்புக்களினூடாக கஷ்டத்திற்குள்ளானவன் தனது இயலாமை மற்றும் பலவீனத்தை உணர்ந்து தனது படைப்பாளனாகிய அல்-ஹாலிகுர்ரஹீம் இடம் மண்டியிட்டு இறைஞ்சுவான். இதனால் தூய்மையான, முகஸ்துதியற்றதொரு ஆத்மார்ந்த வணக்கத்தை நிறைவேற்றியவனாக மாறுவான். ஆம், நோய்நொடிகளுடன் செலவாகும் ஒரு ஆயுள், அல்லாஹ்வை முறைப்பட்டுக் கொள்ளாதிருக்கும் நிபந்தனையுடன், ஈமான் கொண்டவர்களுக்கு வணக்கமாக இருக்கின்றது என்பதற்கான ஸஹீஹான அறிவிப்புக்கள் காணப்படுகின்றன. ஆம் இவ்வாறு உனது ஆயுளின் ஒரு நிமிடத்தை ஆயிரம் நிமிட அந்தஸ்துக்கு உயர்த்தி நீண்டதொரு ஆயுளை உனக்காக வெற்றியீட்டித் தரும் நோய்நொடிகளுக்காக நன்றி செலுத்து.

**மூன்றாவது நிவாரணி**

பொருந்திக் கொள்ளாத நோயாளியே! மனிதன் இந்த உலகத்துக்கு சொகுசாக வாழ்ந்து இன்பம் அனுபவித்து விட்டுச் செல்வதற்காக வரவில்லை என்பதற்கு, தொடர்ந்தேர்ச்சையாக இங்கு வருபவர்கள் விடைபெற்றுச் செல்வதும் வாலிபர்கள் வயோதிபர்களாவதும் மொத்தமாகச் சொல்லப்போனால் இடைவிடாத இழப்புக்கள், பிரிவுகளால் உழன்று கொண்டிருக்கும் இந்த உலகமும் சான்றாகும். மேலும் மனிதன் உயிரினங்களில் அதி பூரணத்துவம் வாய்ந்தவனாகவும் அதி உன்னதமானவனாகவும் அங்க அவயங்கள் விடயத்தில் அதி செல்வச் செழிப்பு மிக்கவனாகவும் அனைத்தும் ஒருமிக்க உயிரினங்களின் அரசன் என்ற அந்தஸ்திலும் இருக்கும் போது, எதிர்கொண்ட மற்றும் எதிர்கொள்வது சாத்தியமான அனர்த்தங்களையும் கஷ்டங்களையும் சிந்திப்பதனூடாக, ஒப்பீட்டளவில் மிருகங்களை விட அதி தாழ் நிலையில், கவலைகள் நிறைந்ததோர் அவல வாழ்க்கை வாழ்கிறான். இதன் அர்த்தமானது, மனிதன் இந்த உலகுக்கு வெறுமனே அழகியதொரு வாழ்க்கை வாழ்ந்து, நிம்மதியாகவும் சொகுசாகவும் வாழ்வைக் கடத்தி விட்டுச் செல்வதற்காக வரவில்லை என்பதாகும். மாறாக, உன்னதமானதொரு மூலதனத்தைக் கையில் வைத்துள்ள மனிதன், அதனை இங்கு முதலீடு செய்து நித்தியமானதும் நிரந்தரமானதுமான ஒரு வாழ்க்கையின் நிம்மதிக்காக உழைப்பதற்கு வந்துள்ளான். அவனது கையில் ஒப்படைக்கப்பட்டுள்ள மூலதனம் வாழ்க்கையாகும். ஒரு வேளை நோய்நொடிகள் இல்லையேல் ஆரோக்கியமும் நிம்மதியும் பொடுபோக்குத்தனத்தை அதிகரிக்கச் செய்யும்; உலகை இனிமையானதாகக் காட்டும்; மறுமையை மறக்கடிக்கச் செய்து விடும். எனவே, மண்ணறையையும் மரணத்தையும் நினைத்துப் பார்க்க விரும்பாது ஆயுள் மூலதனத்தை அநியாயமாகச் செலவளிப்பான். அப்போது, நோய் நொடிகளானது திடீரென்று கண்களைத் திறந்து விடும். உடல் எனும் சதைப்பிண்டத்தைப் பார்த்து, ''நீ மரணத்தை விஞ்சியவனல்லன்; வீண் விளையாட்டுகளுக்கு நேரம் கிடையாது; உன் மீது ஒரு கடமை இருக்கின்றது. ஆகவே அகம்பாவத்தை விட்டு விடு; உன்னைப் படைத்தவனை நினைவு கூர்; மண்ணறைக்கு செல்ல இருப்பதை நினைவில் நிறுத்தி அதற்காக உன்னைத் தயார் செய்து கொள்'' என்று சொல்லும். இதோ மனிதா! இந்தக் கோணத்தில் பார்த்தால் நோய்நொடிகளானது, ஒருபோதுமே ஏமாற்றாத ஒரு புத்திமதியாகவும், தட்டியெழுப்பும் ஒரு வழிகாட்டியாகவும் இருக்கின்றது. ஆகவே அதனைக் கடிந்து கொள்வதல்ல, மாறாக இந்தக் கோணத்தில் அதற்கு நன்றி செலுத்துவதும், வேதனை அதிகரிக்குமெனில் பொறுமையை வேண்டுவதும் அவசியமாகும்.

**நான்காவது நிவாரணி**

முறைப்பட்டுக் கொள்ளும் நோயாளியே! முறைப்பட்டுக் கொள்ளும் உரிமை உனக்குக் கிடையாது, மாறாக நன்றியும் பொறுமையுமே உன் மீது விதிக்கப்பட்டதாகும். ஏனெனில் உனது உடலும் அங்க அவயங்களும் உனது சொத்துக்கள் அல்ல. அவற்றை நீயாக

ஆக்கிக் கொள்ளவுமில்லை; வேறு எங்கேனுமிருந்து பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளவுமில்லை. ஆக அது வேறு ஒருவனுடைய சொத்தாக இருக்கின்றது. அவற்றின் சொந்தக் காரன் தனது சொத்துக்களை விரும்பியவாறு நிர்வகிக்க முடியும். -இருபத்தி ஆறாவது வார்த்தையில் சொல்லப்பட்டதைப் போன்று- உதாரணமாக, மிகவும் செல்வச் செழிப்பும் தேர்ச்சியும் மிக்கதொரு கலைஞன், தனது விலைமதிப்பற்ற செல்வச்செழிப்புக்களை வெளிக்காட்டுவதற்காக, எதற்கும் வக்கற்ற சாதாரண ஒருவனை ஒரு கூலிக்குப் பகரமாக மாடலாகத் தெரிவு செய்து, தான் செய்த கவர்ச்சியும் கலைப்பாடும் மிக்க ஆடையை அவனுக்கு அணிவிக்கின்றான். பிறகு அதற்கு மேலால் சில வேலைப்பாடுகளையும் மாற்றங்களையும் செய்கின்றான். மேலும் தனது தேர்ச்சியின் உச்சத்தை நிரூபிப்பதற்காக அந்த ஆடையை வெட்டியும் கூட்டியும் குறைத்தும் செம்மை செய்கின்றான். இப்போது கூலிக்காக வந்த வக்கற்ற அந்த மனிதன் அந்தக் கலைஞனைப் பார்த்து "என்னை தொந்தரவு படுத்துகின்றீரே, நிமிர்த்தியும் வளைத்தும் நீர் என்னைப் படுத்தும் பாடு எனக்கு நோவினை அளிக்கின்றது. இது போதாதென்று என்னை அழகுபடுத்தும் இந்த ஆடையை வெட்டியும் கொத்தியும் எனது அழகை அசிங்கப்படுத்துகின்றீர்..!" என்று சொல்வதற்கான உரிமையைப் பெற்றுக் கொள்வானா? அல்லது அந்தக் கலைஞனைப் பார்த்து "இரக்கமற்ற ஒரு கொடியவனாக இருக்கின்றாயே" என்று சொல்லும் அருகதை தான் அவனுக்கு இருக்கின்றதா? ஆம், இந்த உதாரணத்திலிருந்து விளங்க வருவதைப் போன்றே அனைத்தையும் விஞ்சிய சர்வ வல்லோனான அந்த வடிவமைப்பாளன் உனக்கு அணிவித்த கண், காது, அறிவு, உள்ளம் போன்ற ஒளிமயமான அவயங்களாலும் உணர்வுகளாலும் வார்க்கப்பட்ட உடல் என்ற ஆடையை, அவனது அழகிய திருநாமங்களின் தொழிற்பாடுகளையும் பிரதிபலிப்புக்களையும் காட்டுவதற்காக, விதவிதமான நிலமைகளை அளித்து நிலை மாற்றுகின்றான். நீ பசி காரணமாக அவனது 'ரஸ்ஸாக்' என்ற நாமத்தை அறிந்து கொள்வதைப் போன்றே, 'ஷா.ஃ.பீ' என்ற நாமத்தை நோயின் வாயிலாக அறிந்து கொள். இவ்வாறு வேதனைகளும் கஷ்டங்களும் ஒரு பகுதி திருநாமங்களின் நியதிகளை வெளிப்படுத்துவதனால், அவற்றில் ஞானத்தின் கீற்றுக்களையும், கருணையின் சுடர்களையும் அந்தக் கீற்றுக்கள் மற்றும் சுடர்களில் பொதிந்திருக்கும் ஏராளமான அழகியல்களையும் கண்டு கொள்ளலாம். ஒரு வேளை திரை அகற்றப்படுமாயின் நீ அச்சம் கொண்டு வெறுக்கும் நோய் என்ற திரைக்குப் பின்னால், நேசத்துக்குரிய அழகிய அர்த்தங்களைக் கண்டு கொள்வாய்.

## ஐந்தாவது நிவாரணி

கஷ்டத்தால் நொடிந்து போயிருக்கும் நோயாளியே! நவீன யுகத்தின் அனுபவத்தின் மூலமாக நான் இறுதியாக வந்த முடிவானது, நோய் நொடிகள் சிலருக்கு ஓர் இறை அருளாக இருக்கின்றது, ரஹ்மானுடைய ஓர் அன்பளிப்பாக இருக்கின்றது என்பதாகும். கடந்த எட்டு ஒன்பது வருடங்களாக சில வாலிபர்கள் தமது நோய்களுக்காக -அருகதை அற்றவனாக இருக்கின்ற நிலையில்- எனது துஆவைப் பெற்றுக் கொள்வதற்காக என்னை சந்திக்க வந்தனர். நான் சந்தித்த ஒவ்வொரு வாலிப நோயாளியும் பிற வாலிபர்களை விட அதிகம் மறுமையைப் பற்றி சிந்திப்பவர்களாக இருப்பதை அவதானித்தேன். அவர்களிடம் வாலிபத்தின் போதை களைந்திருந்தது; பொடுபோக்கு மேலீட்டால் மிருக இச்சைகளுக்கு ஆட்படுவதை விட்டும் தம்மைப் பாதுகாத்துக் கொண்டவர்களாக இருந்தனர். நானும் கூட அவர்களிடம் பொறுமைக்குட்பட்ட நோய்கள் ஒரு இறை அருளாக இருப்பதை நினைவூட்டியவனாக, "என் சகோதரனே நான் உனது இந்த நோய்க்கு எதிரானவன் அல்லன். ஏன் இந்த நோய் காரணமாக உன் மீது இரக்கப்பட்டு வருந்தவும் இல்லை. ஆகவே உனக்காக துஆ செய்வதற்கான தேவையை நான் உணரவில்லை. இந்த நோய் உன்னைப் பூரணமாகத் தட்டி எழுப்பும் வரை பொறுமையைக் கைக்கொள், நோய் அதன் கடமையை நிறைவேற்றிய பிறகு ஹாலிகுர்ரஹீம் உனக்கு ஆரோக்கியத்தை வழங்குவான்" என்று கூறுபவனாக இருந்தேன். அத்தோடு பின்வரும் உண்மையையும் நினைவூட்டுவேன் "உன்னை ஒத்த சிலர் ஆரோக்கிய வியாதியால் பொடுபோக்குத் தனத்திற்கு ஆளாகி, தொழுகையை விட்டு விட்டு, மண்ணறை பற்றிச் சிந்திக்காது, அல்லாஹ்வையும் மறந்து,

உலக வாழ்வின் ஒரு மணித்தியால மாயையான இன்பத்திற்காக, நித்தியமான மறுமை வாழ்வைப் பாழாக்கி சில வேளை அழித்தும் விடுகின்றனர். நீயோ நோய் என்ற கண்ணாடியினூடாக, அனைத்து நிலமைகளிலும் சென்றடையப் போகும் ஒரு தரிப்பிடமான மண்ணறையையும் அதற்கு அப்பாலுள்ள மறுமை வீடுகளையும் கண்டு கொண்டு அதற்கேற்றாட் போல் செயற்படுகின்றாய். அதாவது உன்னைப் பொருத்தவரை நோயானது ஒரு ஆரோக்கியமாகும். உன்னை ஒத்த ஒரு பகுதி வாலிபர்களிடம் காணப்படும் ஆரோக்கியமானது நோயாகும்.''

**ஆறாவது நிவாரணி**

வேதனை மிகுதியால் முறைப்பட்டுக்கொள்ளும் நோயாளியே! உன்னிடம் கேட்கிறேன், கடந்து சென்ற உனது வாழ்க்கையை ஒரு கணம் சிந்தித்துப் பார்! அந்த வாழ்க்கையில் இன்பகரமான சொகுசான நாட்களையும் கஷ்டகரமான வேதனை மிக்க பொழுதுகளையும் ஒரு முறை நினைவுபடுத்திக்கொள்! அநேகமாக, ஒன்றோ ''ஆஹா!'' என்பாய் அல்லது ''ஓஹோ!'' என்பாய். அதாவது, ஒன்றோ 'அல்ஹம்துலில்லாஹ்' என்பாய் அல்லது 'எனது கெட்ட காலமே', 'கைசேதமே' என்று உனது உள்ளம் அல்லது நாவு கதறும். அவதானத்தோடு பார்ப்பாயானால், உனக்கு ஆஹ், அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்ல வைப்பது உன்னைக் கடந்து சென்ற கடந்த கால வேதனைகளும் கஷ்டங்களுமாகும். ஆக அவை ஒரு ஆத்ம இன்பத்தை உனக்கு அளிக்கின்றன, ஆகையால் உனது உள்ளம் நன்றி செலுத்துகின்றது. ஏனெனில் வேதனைகளின் முடிவு இன்பமாகும். அந்த வேதனைகளும் கஷ்டங்களும் தமது முடிவுகளோடு ஆன்மாவில் ஒரு இன்பத்தை வாரிசுச் சொத்தாக விட்டுச் செல்கின்றன. ஆக அதை சிந்திப்பதனூடாக சற்று கிளறி விட்டால் ஆன்மாவிலிருந்து இன்பம் ஊற்றெடுக்கின்றது; நாவிலிருந்து நன்றித்துளிகள் சொட்டுகின்றன. கெட்டகாலமே! கைசேதமே! என்று சொல்ல வைப்பது கடந்த காலத்தில் அனுபவித்த சொகுசான இன்பம் கொழிக்கும் அந்த நாட்களாகும். ஆக அவை தமது முடிவுகளோடு உனது ஆன்மாவில் நிரந்தரமானதொரு வேதனையை வாரிசுச் சொத்தாக விட்டுச் சென்றுள்ளன. அதைப் பற்றிச் சிந்திக்கும் போதெல்லாம், அந்த வேதனை மீண்டும் பொங்கியெழுந்து கைசேதத்தையும் ஓஹோ என்ற ஓலங்களையும் ஊற்றெடுக்கச் செய்கின்றது. ஆகவே உண்மை என்னவெனில் ஒரு நாள் முறைகேடான இன்பம் சிலவேளை ஒரு வருட ஆத்ம வேதனையை அளிக்கின்றது. மேலும் ஒரு நாள் தற்காலிக நோயினால் வரும் வேதனையிலிருந்து நீண்ட நாட்களிற்கு அது ஈட்டித் தந்த நன்மைகளால் வரும் ஆத்ம இன்பத்துடன் கூடவே அதன் முடிவோடு உள்ள விடுதலையிலிருந்து வரும் ஒரு ஆத்ம இன்பமும் இருக்கின்றது. தற்போதைக்கு உன்னைத் தொற்றியிருக்கும் இந்த தற்காலிக நோயிலுள்ள மேற்படி விளைவையும் அது தன்னகத்தே பொதிந்திருக்கும் நன்மைகளையும் சிந்தி. ''இதுவும் கடந்து விடும்'' என்று கூறி முறைப்பட்டுக் கொள்வதற்குப் பதிலாக நன்றி செலுத்து.

**ஆறாவது நிவாரணி**[2]

உலக இன்பங்களை அனுபவிக்க முடியாதிருப்பதால், நோயிலிருந்து வருந்தும் என் சகோதரா! இந்த உலகம் ஒரு வேளை நிரந்தரமானதாக இருந்து, எமது பாதையில் மரணம் என்றொன்று இல்லாதிருந்து, இடைவழியில் பிரிவு, முடிவு என்பவற்றின் தென்றல்கள் வீசாதிருந்து, கஷ்டங்களும் சூறாவளிகளும் நிறைந்த எதிர்காலத்தில் ஆத்மார்ந்த வரட்சிக் காலங்களும் இல்லாதிருந்திருப்பின், நானும் உன்னுடன் கூடவே உனது நிலைக்காக வருந்தியிருப்பேன். ஆனால் யதார்த்தம் என்னவெனில், உலகம் ஒரு நாள் எம்மைப் பார்த்து, போதும்! இனி வெளியேறிவிடு என்று சொல்லி விடும்; எமது ஓலங்களுக்கு முன்னால் செவியை மூடிக் கொள்ளும். ஆக அது எம்மை வெளியேற்ற முன்னர், நாமே இந்த நோய்நொடிகளின் எச்சரிக்கைக்கிணங்க இப்போதே அதைக் காதலிப்பதை விட்டு விட

---

[2] : இந்த மின்னல் இயல்பானதொரு வடிவில் நினைவுக்கு வந்ததால் ஆறாவது பகுதியில் இரண்டு நிவாரணிகள் ஒன்றாக எழுதப்பட்டுள்ளது. இயல்புத் தண்மையை மாற்றாதிருப்பதற்காகவும் ஏதோ ஒரு இரகசியமிருக்கலாம் என்ற எண்ணத்திலும் மாற்றாது விட்டு விட்டோம்.

வேண்டும். அது எம்மைப் புறந்தள்ளிவிட முன்னர், உள்ளத்தால் நாம் அதைப் புறந்தள்ளி விட வேண்டும். ஆம் இந்த நோய்நொடிகள் பின்வரும் உண்மையை எமக்கு நினைவூட்டும். “உனது உடல் பாறைகளாலோ, உருக்காலோ ஆனதல்ல. மாறாக ஒவ்வொரு கலமும், சிதைந்து செல்லத் தயார் நிலையிலுள்ள பல்வேறு மூலக்கூறுகளின் தொகுப்பாகும். பெருமையை விட்டுவிடு; உனது இயலாமையை விளங்கிக் கொள்; உனது இரட்சகனை அறிந்து கொள்; உனது பணியை விளங்கி உலகிற்கு எதற்காக வந்தாய் என்பதை விளங்கிக் கொள்!” என்று நோயானது இதயத்தின் சுவர்களில் எதிரொலிக்கச் செய்கின்றது. மேலும், உலக இன்பங்கள், இனிமைகள் சதாவும் இருப்பதில்லை என்பது யதார்த்தமானதாகும். விஷேடமாக அவை தடுக்கப்பட்டவை எனில் தொடர்ச்சியற்றதாக இருப்பதோடு கூடவே வேதனை மிக்கவையாகவும் பாவமீட்டித் தரக்கூடியவையாகவும் இருக்கின்றன. உன்னைத் தொற்றியிருக்கும் நோய் காரணமாக அந்த இன்பங்களை அனுபவிக்க முடியாதிருக்கின்றதே என்று முணுமுணுக்காதே! மாறாக நோய்களில் பொதிந்திருக்கும் ஆத்மார்ந்த வணக்கம் மற்றும் மறுமை சார் நன்மைகளை சிந்தித்து இன்பமாக இருக்க முயற்சி செய்.

### ஏழாவது நிவாரணி

ஆரோக்கியத்தின் இனிமையை இழந்த நோயாளியே! உனது நோயானது ஆரோக்கியத்தோடு ஒட்டியிருக்கும் இறை அருள்களின் இன்பங்களை அழிப்பதில்லை, மாறாக சுவைக்கவும் அதிகரிக்கவும் செய்கின்றது. ஏனெனில் ஒரு விடயம் தொடர்ந்தேர்ச்சையானதாக இருக்குமெனில் அது தனது வினைத்திறனை இழந்து விடும். மேலும்: اِنَّمَا اْلاَشْيَاءُ تُعْرَفُ بِاَضْدَادِهَا என்பது சத்தியவான்களின் ஒருமித்த கருத்தாக இருக்கின்றது. அதாவது “அனைத்து வஸ்துக்களும் அதன் முரண் நிலைகளைக் கொண்டே அறியப்படும்.” ஊதாரணமாக, இருள் இல்லாதிருப்பின் வெளிச்சம் அறியப்படாத ஒன்றாகவும் இனிமை அற்ற ஒன்றாகவும் ஆகியிருக்கும். குளிர் இல்லாவிட்டால் சூடு உணரப்படாததாகவும் அனுபவிக்க முடியாததாகவும் ஆகியிருக்கும். பசி இல்லையேல் உணவு சுவை தராது. தாகம் இல்லையேல் நீர் தெவிட்டாது. இதே போன்றே சுகயீனம் இல்லாவிட்டால் சுகம், சுகம் தர மாட்டாது. நோய்நொடிகள் இல்லாவிட்டால் ஆரோக்கியம் இன்பமளிக்காது. ஆக உண்மையிலேயே அனைத்தையுமே பயனுக்காகவும் ஒரு நோக்கத்திற்காகவும் படைத்த அல்-ஃபாதிருல் ஹகீம் ஆகிய அந்தப் படைப்பாளன், மனிதனுக்குத் தனது அனைத்து விதமான கொடைகளையும் உணரச் செய்து அருள்களையும் அனுபவிக்கச் செய்வதன் மூலமாக, மனிதன் சதாவும் தனக்கு நன்றி செலுத்துபவனாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். இந்த உண்மையை, பிரபஞ்சத்திலிருக்கும் எண்ணற்ற வகை வகையான அருள்களை எடைபோட்டு அனுபவிக்க முடியுமான ஏராளமான அங்க அவயங்களின் மொத்தமாக மனிதனை வடிவமைத்ததனூடாக நிரூபிக்கின்றான். ஆகவே நிச்சயமாக சுகத்தையும் ஆரோக்கியத்தையும் அளித்ததைப் போன்றே நோய்நொடிகள், கஷ்டநஷ்டங்கள் போன்றவற்றையும் அளிப்பான். மனிதா! உன்னிடம் கேட்கிறேன்: “உனது தலையில் அல்லது கையில் அல்லது வயிற்றில் இருக்கும் இந்த நோய் இல்லாதிருந்திருப்பின், தலை, கை, வயிறு என்பவற்றின் ஆரோக்கியத்தில் இருக்கும் இன்பகரமான அருள்களை எண்ணி நீ நன்றி செலுத்தியிருப்பாயா? நிச்சயமாக நன்றி ஒரு புறமிருக்க அநேகமாக சிந்தித்தே இருக்க மாட்டாய்; உணர்வுகளை மரத்துப் போக வைத்த அந்த ஆரோக்கியத்தை பொடுபோக்கு மேலீட்டால் அநேகமாக பாவங்களில் செலவளித்திருப்பாய்.”

### எட்டாவது நிவாரணி

மறுமையை சிந்திக்கும் நோயாளியே! நோய்கள் சவர்க்காரம் போன்று பாவங்களையும் அழுக்குகளையும் அகற்றி சுத்தப்படுத்தி விடுகின்றன. நோய்கள் பாவப்பிரயச்சித்தமாக இருக்கின்றது என்பதற்கு ஸஹீஹான ஹதீஸ்கள் ஆதாரமாக இருக்கின்றன. ஒரு ஹதீஸில்

“முற்றிய மரத்தை ஆட்டும் போது எவ்வாறு கனிகள் விழுகின்றதோ அதே போன்று ஈமானுள்ள ஒரு நோயாளியின் உடல் நடுக்கமும் கூட அவனது பாவங்களை உதிரச் செய்து விடும்’’ என்று வருகின்றது. பாவங்களானது நித்திய மறுமை வாழ்க்கையைக் குறுக்கிடும் நிரந்தர நோய்களாகும். இந்த உலக வாழ்விலும் கூட உள்ளம், மனசாட்சி, ஆன்மா போன்றவற்றுக்கான ஆத்மார்ந்த நோய்களாக அவை காணப்படுகின்றன. நீ பொறுமையாக இருந்து முறைப்பட்டுக் கொள்ளாவிட்டால், இந்தத் தற்காலிக நோயால் ஏராளமான நிரந்தர நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொண்டவனாக ஆகி விடுவாய். மாறாக பாவங்களைப் பொருட்படுத்தாதவனாக அல்லது மறுமையை மறந்தவனாக அல்லது அல்லாஹ்வை அறியாதவனாக இருப்பின் உன்னை எப்படிப்பட்ட பயங்கரமானதொரு நோய் தொற்றியிருக்கின்றது எனில், அது உன்னிடமிருக்கும் இந்த அற்ப உடலியல் நோயை விட மில்லியன் மடங்கு பெரியதாகும். உண்மையில் அதற்காகத் தான் அழுது புலம்ப வேண்டியவனாக இருக்கின்றாய். ஏனெனில் ஒட்டுமொத்த படைப்பினங்களோடும் உனது உள்ளம், ஆன்மா மற்றும் ந.ஃப்ஸ் என்பன தொடர்பு பட்டுள்ளன. தொடர்ந்தேர்ச்சையான பிரிவு, முடிவு என்பவற்றால் அந்தத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு உன்னில் எண்ணிலடங்கா காயங்களைத் தோற்றுவிக்கின்றன. விஷேடமாக நீ மறுமையை அறியாதவனாக இருப்பதாலும் மரணத்தை நிரந்தர அழிவாக சித்தரித்துக்கொண்டதன் விளைவாகவும், ஏரத்தாள பிணியாலும் காயங்களாலும் அவதிப்படும் உலகளவு பெரிதான நோய்வாய்ப்பட்டதொரு ஆத்மார்ந்த உடம்பைத் தாங்குகின்றாய்.

ஆம், முதன்முதலில் எண்ணிலடங்கா காயங்கள், பிணிகளோடுள்ள இந்தப் பிரமாண்டமான ஆத்மார்த்த உடலைப் பீடித்திருக்கின்ற எண்ணற்ற நோய்களுக்கான திட்டமான மருந்தாகவும் நிவாரணியாகவும் இருக்கின்ற ஈமான் எனும் சஞ்சீவியைத் தேடிப்பெற்று, உனது பாதையை நெறிப்படுத்த வேண்டியவனாக நீ இருக்கின்றாய். ஆக இப்போதைக்கு அந்த சஞ்சீவியை அடைந்து கொள்வதற்கான மிக இலகுவான பாதையானது, உனது உடலியல் ரீதியான நோய் கிழித்தெறிந்த பொடுபோக்குத் திரையானது இன்று வரை திரையிட்டிருந்த உனது இயலாமை, பலவீனம் என்ற யன்னல்களினூடாக அல்-கதீரு (ணு)துல்ஜலால் உடைய குத்ரத்தையும், ரஹ்மத்தையும் அறிந்து கொள்வதாகும். ஆம் அல்லாஹ்வை அறியாதவனின் தலையில் உலகம் நிரம்புமளவு தரித்திரியம் நிரைந்திருக்கின்றது. அல்லாஹ்வை அறிந்தவனின் உலகமோ ஒளியாலும் ஆத்ம இன்பத்தாலும் நிரம்பியதாகும். இந்த உண்மையை ஒவ்வொருவனும் தனது அந்தஸ்துக்கேற்ப தனது ஈமானிய பலத்தைக் கொண்டு அனுபவிப்பான். ஈமானிலிருந்து வரும் இந்த ஆத்மார்ந்த இன்பம், இனிமை, சுகம் என்பவற்றுக்கு முன்னால் அற்ப உடலியல் நோய்களிலிருந்து வரும் வேதனைகளானது கரைந்து காணாமல் போய் விடும்.

**ஒன்பதாவது நிவாரணி**

படைப்பாளனை அறிந்து கொண்ட நோயாளியே! நோய் நொடிகளோடு வேதனைகளும் பயம்மும் பீதியும் ஒட்டிக் கொள்வது, அந்த நோய்கள் சிலவேளை மரணத்துக்கான காரணியாக அமைந்து விடுகின்றன, என்ற அடிப்படையிலாகும். மரணமானது பொடுபோக்குத்தனமிக்க வாழ்கைக்குள், பார்வைக்குப் பயங்கரமானதாக இருப்பதால், அதற்குக் காரணமாக இருக்கின்ற நோய்கள் பீதியூட்டுகின்றன; நடுக்கத்தை ஏற்படுத்துகின்றன.

முதலில், “அஜல்’’ நிர்ணயிக்கப்பட்டு விட்டது, அதில் மாற்றம் கிடையாது’’ என்பதை அறிந்து, உறுதியாக ஈமான் கொள். “ கடும் நோயாளிகளின் தலைமாட்டில் நின்று அழுத ஏராளமானவர்களும் பூரண ஆரோக்கியத்தோடு இருந்த பலரும் மரணித்துள்ளார்கள், அந்த நோயாளிகளோ சுகம் பெற்று நீடுழி வாழ்ந்துள்ளனர்’’.

இரண்டாவதாக: மரணமானது தோற்றத்தளவில் தென்படுவது போன்று பயங்கரமானது அல்ல. -ரஸாஇல்களின் பல பகுதிகளில், சர்வ ஞானம் பொருந்திய குர்ஆனின் ஒளியைக்

கொண்டு சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டதற்கிணங்க- ஈமான் கொண்டவர்களுக்கு மரணமானது, வாழ்க்கைப் போராட்டத்தின் கஷ்டங்களிலிருந்துமான ஒரு விடுதலையாகும்; உலக சோதனைக்களத்தில் ஏவல், விலக்கல்களின் உள்ளடக்கமான உபூதிய்யத் பணியிலிருந்துமுள்ள ஒரு விடுமுறையாகும்; மறு உலகுக்குப் பயணித்த தொண்ணூற்றொன்பது வீதமான உற்றார் உறவினர்களை அடைந்து கொள்வதற்கான ஒரு ஊடகமாகும்; உண்மைத் தாயகமான நித்திய நிம்மதிகள் கொழிக்கும் தங்குமிடத்திற்கு நுழைவதற்கான ஒரு நுளைவுச் சீட்டாகும்; உலக சிறைச்சாலையிலிருந்து சுவனத்து நந்தவனங்களிற்கான ஒரு அழைப்பாகும்; படைப்பாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய ஹாலிகுர்ரஹீமுடைய அருளில் இருந்து, தனது பணிக்குப்பகரமான கூலியைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு தரிசனமாகும். இது தான் சத்தியத்தின் அடிப்படையிலான மரணத்தின் உண்மைத் தன்மையாகும். ஆகவே அதைப் பயங்கரமானதாக அன்றி அருட்கொடைகளுக்கும் நிம்மதிக்குமான ஆரம்பமாகப் பார்த்தல் வேண்டும். அத்தோடு இறை நேசச்செல்வர்களுல் சிலர் மரணத்திலிருந்து அஞ்சிய விடயமானது, மரணத்தின் பயங்கரம் காரணமாக அன்றி இன்னும் அதிகமதிகம் நன்மைகள் செய்ய வேண்டுமே என்ற ஆதங்கமும் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வதால் அந்த நன்மைகளை அடைந்து கொள்ள முடியுமாக இருக்கின்றது என்பதுமாகும். ஆம் ஈமான் கொண்டவர்களுக்கு மரணமானது சௌபாக்கியங்களை அடைந்து கொள்வதற்கான ஒரு வாயிலாகும். வழிகேட்டில் உள்ளவர்களுக்கோ முடிவில்லாத இருண்டதொரு கிணறாகும்.

**பத்தாவது நிவாரணி**

அவசியமின்றி ஆதங்கப்படும் நோயாளியே! நோயின் சுமை காரணமாகவே ஆதங்கப்படுகின்றாய். அந்த ஆதங்கமானது உனது நோயின் சுமையை இன்னுமின்னும் அதிகரிக்கவே செய்கின்றது. நோயின் சுமை குறைய வேண்டுமெனில், ஆதங்கப் படாதிருக்க முயற்சி செய்! அதாவது நோயின் பயன்களையும், நன்மைகளையும் நோய் விரைவாக குணமாகி விடும் என்பதையும் நினைத்து ஆதங்கத்தை அகற்றி விடு! ஆம், ஆதங்கம் நோயை இரட்டிப்பாக்கி விடும்; உடலியல் ரீதியான நோயோடு ஆதங்கப்படுவதன் காரணமக உளவியல் ரீதியான ஒரு நோயும் உள்ளத்தில் தொற்றிக்கொள்ளும், உடலியல் நோய் அந்த உளவியல் நோயின் கைப்பிடித்து வளரும். மாறாக சரணடைந்து, பொருந்திக் கொண்டு நோயின் தாத்பரியங்களை சிந்திப்பதனூடாக அந்த ஆதங்கம் அகற்றப்பட்டால் அந்த உடலியல் நோயின் பெரும்பகுதி வேரறுக்கப்பட்டு இலகுவானதாக ஆகி விடும்; ஒரு பகுதி தேறியும் விடும். ஒரு திர்ஹம் அளவேயான உடலியல் நோய் ஆதங்கத்தினூடாக பூதாகரப்படுத்தப்படும் போது பத்து திர்ஹமாகப் பெரிதாகி விடும். ஆதங்கம் அகற்றப்பட்டால் அந்த நோயின் பத்தில் ஒன்பது அகன்று விடும், ஆதங்கம் நோயை அதிகரிக்கச் செய்வதைப் போன்றே மறுபுறம் இறை ஞானத்தை நிந்தனை செய்வதாகவும், இறை கருணையைக் கடிந்து கொள்வதாகவும், படைப்பாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்-ஹாலிகுர்ரஹீமை முறைப்பட்டுக் கொள்வதாகவும் இருக்கின்ற காரணத்தால், எப்போதும் முரண் விளைவையே தரும்; நோயை இன்னுமின்னும் அதிகரிக்கச் செய்யும். ஆம், இறை நன்றி அருள்களில் அதிகரிப்பை ஏற்படுத்துவத்தைப் போன்றே, முறைப்பட்டுக் கொள்வதானது, நோய்நொடிகளையும் கஷ்டநஷ்டங்களையும் அதிகரிக்கச் செய்கின்றது. அத்தோடு ஆதங்கம் என்பது தன்னளவில் ஒரு நோயாகும். அதற்கான ஔடதம் நோயில் பொதிந்திருக்கின்ற தாத்பரியங்களை விளங்கிக் கொள்வதாகும். ஏலவே அதன் தாத்பரியங்கள் பயன்களை அறிந்து கொண்டோம், ஆக அந்த ஔடதத்தை ஆதங்கத்தின் மீது தடவி விமோசனத்தைப் பெற்றுக் கொள்! “ஓஹோ!” என்பதற்குப் பதிலாக ஆஹா!” என்று சொல்! “கைசேதமே!” என்பதற்குப் பதிலாக “அல்ஹம்துலில்லாஹ்” என்று முழங்கு!

**பதினொன்றாவது நிவாரணி**

பொறுமையற்ற நோயாளியே! நோயானது ஒரு உடனடி வேதனையை உனக்குத் தந்தாலும் கூட, முந்தைய நோய்க்கும் தற்போதைய நோய்க்கும் இடைப்பட்ட காலத்தில் அந்த நோயின் இல்லாமையிலிருந்து வரும் ஒரு ஆத்ம திருப்தியையும் தற்போதைய

நோயிலிருந்து கிடைக்கும் நன்மைகளிலிருந்து வரும் ஒரு ஆத்ம இன்பத்தையும் அளிப்பதாக இருக்கின்றது. இன்றைக்கு அல்லது இந்த மணித்தியாலத்திற்குப் பிறகுள்ள காலமும் கூட நிச்சயமற்றதாகும். எனவே அதிலும் கூட நோய்களை இல்லாததாகவே கொள்ளவேண்டும். ஆகவே நிச்சயமாக இந்த இல்லாமையிலிருந்தும் எந்த வேதனைகளும் இல்லை. வேதனை இல்லாவிட்டால் பாதிப்படைய வேண்டிய அவசியமும் கிடையாது. ஆனால் நீயோ பிழையான வழியில் சென்று மாயையில் வீழ்ந்தமையால் பொறுமையின்மைக்கு ஆட்படுகின்றாய். ஏனெனில் இன்று வரையான அனைத்து நோய்களினதும் உடலியல் சார்ந்த பகுதிகள் அகன்று விட்டதால் அதன் வேதனைகளும் சேர்ந்தே அகன்று விட்டன; அதிலுள்ள நன்மைகளும் அவற்றின் முடிவால் ஏற்பட்ட இன்பமும் எஞ்சியுள்ளன. ஆக அவை உனக்கு இன்பமும் மகிழ்ச்சியும் தர வேண்டி இருக்கும் போது அவற்றை நினைத்து வருத்தப்படுவதும் பொறுமையின்மைக்கு ஆட்படுவதும் மடத்தனமாகும். வர இருக்கின்ற நாளைய தினங்கள் இன்னும் வரவில்லை. அவற்றை இப்போதிருந்தே சிந்தித்து, இல்லாத ஒரு நாளில், இல்லாத ஒரு நோயின், இல்லாத ஒரு வேதனையை கற்பனை செய்து வருத்தப்படுவதும் பொறுமை இழப்பதும் மேற்படி மூன்று கட்ட இல்லாமைகளுக்கு இருப்பு அந்தஸ்த்தை வழங்குவதும் மடமையன்றி வேறென்ன? ஆக உண்மையில் இந்த மணித்தியாலத்திற்கு முந்தைய நோய்க்காலங்கள் மகிழ்ச்சியை விட்டுச் சென்றுள்ளன. மேலும் நிச்சயமாக இந்த மணித்தியாலத்திற்குப் பிறகுள்ள காலமும், அதில் வரக்கூடிய நோய்கள், வேதனைகள் என்பனவும் கூட இல்லாத ஒன்றாகும். ஆகவே அல்லாஹ் உனக்களித்த ஒட்டுமொத்த பொறுமைச் சக்தியையும் இந்த மணித்தியால வலிக்கு எதிராக ஒன்றுதிரட்டு! “யா ஸப்ர்!” என்று கூறி தாக்குப் பிடி!

### பன்னிரண்டாவது நிவாரணி

நோய் காரணமாக வணக்க வழிபாடுகள், திக்ர் அவ்ராதுகளை விட்டும் தூரமாக நிர்ப்பந்திக்கப்பட்டதால் கவலைப்படும் நோயாளியே! அறிந்து கொள்! தக்வா உள்ள ஒரு மு.ஃ.மின், நோய் காரணமாக செய்ய முடியாது போன தொடர்ந்தேர்ச்சையாக செய்து வரும் வணக்க வழிபாடுகளுக்கான நன்மைகளை நோய்க்காலங்களிலும் பூரணமாக அடைந்து கொள்வான் என்பது ஹதீஸ்கள் வாயிலாக உறுதியானதாகும். பொறுமை மற்றும் தவக்குலோடு பர்ள்களை முடியுமான வரை நிறைவேற்றும் ஒரு நோயாளியின் நோயானது கடும் நோய் காரணமாக அவனால் நிறைவேற்ற முடியாது போன பிற சுன்னத்களின் இடத்தை, மிகவும் தூய்மையானதொரு அமைப்பில் நிரப்பி விடுகின்றது. மேலும் மனிதனுக்கு தனது இயலாமை மற்றும் பலவீனத்தை உணர்த்தும். அந்த இயலாமையின் மொழியினால் பலவீனத்தின் நாவினால் சொல்லாகவும் செயலாகவும் ஒரு பிரார்த்தனையை செய்ய வைக்கும். ஆம், அல்லாஹ் மனிதனுக்கு, அவன் சதாவும் இறை சந்நிதானத்தை நோக்கி இறைஞ்சி உளமாற துஆ செய்பவனாக இருக்க வேண்டும் என்பதற்காக எல்லையில்லாத இயலாமையும் முடிவில்லாத பலவீனத்தையும் வழங்கியுள்ளான். “ قُلْ مَا يَعْبَؤُا بِكُمْ رَبِّى لَوْلَا دُعَاؤُكُمْ ” அதாவது “துஆ இன்றேல் உங்களது பெறுமதி தான் என்ன?” என்ற வசனத்தின் சாடைக்கமைய மனிதனின் படைப்பிலுள்ள ஞானமும் அவனது அந்தஸ்திற்கான காரணமுமான தூய துஆவை கேட்பதற்கான ஒரு காரணியாக நோய் இருப்பதால், இந்தக் கோணத்தில் முறைப்பாடு அல்ல மாறாக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதும் நோய் திறந்து விட்ட துஆவிற்கான கதவை ஆரோக்கியத்தை அடைந்த உடனே மூடி விடாதிருப்பதும் அவசியமாகும்.

### பதிமூன்றாவது நிவாரணி

நோய் காரணமாக முறைப்பட்டுக்கொள்ளும் நாதியற்ற நோயாளியே! நோயானது சிலருக்கு விலைமதிப்பற்றதொரு பொக்கிஷமாகவும் பெறுமதிமிக்கதொரு இறை அன்பளிப்பாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு நோயாளியும் தனது நோயை இந்த வகைக்குட்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம். அதாவது, உண்மையில் அஜலுடைய நேரம் நிச்சயமற்றதாகும். வல்லோன்

அல்லாஹ் மனிதனை பூரண நம்பிக்கையீனம் மற்றும் பூரண பொடுபோக்குத்தனம் என்பவற்றிலிருந்து பாதுகாத்து அச்சம், நம்பிக்கை என்ற இரு துறுவங்களுக்கிடையில், உலகத்தையும் மறுமையையும் ஒரே சமயம் பாதுகாத்துக் கொள்வதற்கான அச்சானியில் நிலைப்படுத்துவதற்காக, தனது ஞானத்தின் வெளிப்பாடாக அஜலை மறைத்துள்ளான். ஆக எந்த நேரமும் அஜல் வர முடியும் என்பதோடு ஒரு வேளை மனிதனை பொடுபோக்கில் இருக்கும் போது பிடித்துக் கொண்டால் நித்திய மறுமை வாழ்விற்கு பாரிய பாதகங்களை ஏற்படுத்த முடியும். நோயானது பொடுபோக்கைக் களைத்து மறுமையை நினைவூட்டும்; மரணத்தை சிந்திக்கச் செய்து அதற்காகத் தயார் படுத்தும். இதன் மூலம் சில போது இருபது வருடங்களில் சம்பாதிக்க முடியாது போன அந்தஸ்தை வெறும் இருபதே நாட்களில் சம்பாதிப்பான். இதற்கேற்ப,

எமது தோழர்களில் –அல்லாஹ் ரஹ்மத் செய்வானாக- இரண்டு வாலிபர்கள் இருந்தனர். ஒருவர் 'இலாமா'வைச் சேர்ந்த ஸப்ரி, மற்றவர் 'இஸ்லாம்' கிராமத்தைச் சேர்ந்த வஸீர்ஸாதே முஸ்த.்.பா. இந்த இருவரும் எனது மாணவர்களுக்கு மத்தியில் எழுத முடியாதவர்களாக இருந்த போதிலும் விசுவாசத்திலும் ஈமானியப் பணியிலும் மிக முன்னனியில் நிற்பதை வியப்பு மேலீட்டோடு அவதானித்தவனாக இருந்தேன். இதன் தாத்பரியம் புரியவில்லை. அவர்களுடைய மரணத்தின் பின்னர் இருவரிடமும் கடுமையானதொரு நோய் இருந்ததை அறிந்து கொண்டேன். அந்த நோய் வழங்கிய தெளிவினூடாக, பொடுபோக்குத்தனமானதொரு வாழ்வுக்குள், கடமைகளை புறக்கணிக்கும் பிற வாலிபர்களைப் போலன்றி மிக உயர்ந்ததொரு தக்வாவோடு, மிகப்பெறுமதி வாய்ந்ததொரு பணியில் மறுமைக்குப் பிரயோசனம் அளிக்கக்கூடியதொரு வாழ்க்கை வாழ்ந்தனர். இன்ஷா அல்லாஹ் அவர்களது இரண்டு வருட நோயின் கஷ்டம் கோடிக்கனக்கான வருட நித்திய வாழ்வின் நிம்மதிக்குக் காரணமாக அமைந்து விட்டது. நான் சிலபோது அவர்களது ஆரோக்கியத்துக்காகக் கேட்ட துஆக்கள் சம்பந்தமாக இப்போது விளங்கிக் கொண்டது என்னவெனில், ஒரு வேளை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் எனில் அவை அவர்களாது மறுமை விடயத்தில் பதுவாவாக மாறியிருக்கும் என்பதாகும். இன்ஷா அல்லாஹ் அந்த துஆக்கள் அவர்களது ஆரோக்கியமான மறுமை வாழ்க்கைக்காக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும்.

ஆம் அந்த இருவரும், -எனது நம்பிக்கையின்படி- பத்து வருட தக்வா ஊடாக அடைந்து கொள்ளக்கூடிய சம்பாத்தியத்தின் அளவானதொரு இலாபத்தை அடைந்து கொண்டார்கள். ஒருவேளை இருவரும், ஒரு கூட்டம் வாலிபர்களைப் போன்று ஆரோக்கியத்தையும் வாலிபத்தையும் நம்பி பொடுபோக்கையும் பாவங்களையும் நோக்கி விரைந்திருப்பின், மரணமும் அவர்களைச் சுற்றி வளைத்து, சரியாக பாவக் கிடங்குக்குள் இருக்கும் போது பிடித்திருப்பின், அந்த ஒளிமயமான இருப்பிடத்திற்குப் பதிலாக தமது மண்ணறைகளை பாம்புகளினதும் விஷ ஜந்துக்களினதும் கிடங்காக மாற்றியிருப்பர். ஆக உண்மையில் நோய்களில் இப்படிப்பட்ட பயன்கள் இருக்கின்றன. எனவே அதைப்பற்றி முறைப்பட்டுக் கொள்வதை விட்டுவிட்டு தவக்குல் மற்றும் பொறுமையோடு நன்றி செலுத்தி இறை கருணை மீது ஆதரவு வைக்க வேண்டும்.

### பதிநான்காவது நிவாரணி

கண்களில் திரையிடப்பட்ட நோயாளியே! ஈமான் கொண்டவர்கள் தமது கண்களுக்கு இடப்படும் திரைக்குப் பின்னால் எப்படிப்பட்ட பிரகாசமான ஆத்மார்ந்த கண்களை அடைந்து கொள்கின்றார்கள் என்பதை அறிவாயானால் "எனது றப்புர்ரஹீமிற்கு கோடி நன்றிகள் உண்டாவதாக" என்று கூறுவாய். இந்த நிம்மதிக்கு ஆதாரமாக உள்ள ஒரு சம்பவத்தை கூறுகிறேன். அதாவது, எனக்காக எட்டு வருடங்கள் பூரண விசுவாசத்தோடு எந்த வித முணுமுணுப்புமின்றி சேவை செய்த பார்ளாவைச் சேர்ந்த சுலைமானின் அத்தையுடைய கண்கள் ஒரு சமயம் பார்வை இழந்து விட்டது. அந்த ஸாலிஹான பெண் எனக்கு தகுதியை விட நூறு மடங்கு அதிகம் அந்தஸ்தளித்தவராக "எனது கண்கள் குணமடைய துஆ செய்யுங்கள்" என்று பள்ளிவாசல் வாயிலில் என்னை பிடித்துக் கொண்டார். நானும்

அருள் பாலிக்கப்பட்ட, இறை காதலில் திளைத்த அந்தப் பெண்ணின் ஸாலிஹான நிலையை எனது துஆவிற்கான பரிந்துரையாக்கி "யா ரப்பி, அவளது ஸாலிஹான நிலையின் புண்ணியத்திற்காக அவளது கண்களை குணப்படுத்தி விடு" என்று இறைஞ்சினேன். அதற்கு இரண்டாவது நாள் புர்தூரைச் சேர்ந்த ஒரு கண் வைத்தியர் அங்கு வந்த போது அவரது கண்களைக் குணப்படுத்தினார். நாட்பது நாட்கள் கழிந்து மீண்டும் அவரது கண்கள் பார்வை இழந்து விட்டன. நான் மிகவும் கவலைப் பட்டேன். அதிகமதிகம் துஆ செய்தேன். இன்ஷாஅல்லாஹ் அந்த துஆக்கள் அவரது மறுமைக்காக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும். இல்லையேல் எனது அந்த துஆக்கள், அவளது விடயத்தில் ஒரு பதுவாவாக மாறும் அபாயம் இருந்தது. ஏனெனில் அவரது அஜலில் நாற்பது நாற்களே எஞ்சியிருந்தன. நாற்பது நாற்கள் கழித்து –அல்லாஹ் ரஹ்மத் செய்வானாக- வபாத்தாகி விட்டார்.

ஆம் அந்த மர்ஹூமா, நாற்பது நாற்கள் பார்ளாவின் இதமான தோட்டங்களை ஏக்கத்தோடும் வயதான கண்களாளும் பார்ப்பதற்குப் பதிலாக, மண்ணறையில் சுவனத் தோட்டங்களை நாற்பதாயிரக்கணக்கான நாட்கள் பார்த்து ரசிக்கும் பாக்கியத்தை அடைந்து கொண்டார். ஏனெனில் பலமான ஈமானோடும் ஸாலிஹான தன்மையில் உத்தமியாகவும் இருந்தார். ஆம் ஒரு மு்.மின் கண்கள் திரையிடப்பட்ட நிலையில் மண்ணறையை அடைந்தால் தனது அந்தஸ்திற்கேற்ப பிற கப்றுவாசிகளை விட மிக அதிகமாக அந்த ஒளி உலகை பார்த்து ரசிக்க முடியும். இந்த உலகில் நாம் எவ்வாறு ஏராளமான விடயங்களைப் பார்வையிடுகின்றோம், கண் பார்வையற்ற மு்.மின்களோ பார்வையிட முடியாதுள்ளனர். கப்ரில் அந்தக் கண் பார்வையற்றவர்கள் ஈமானோடு சென்றிருப்பின் தத்தமது படித்தரத்துக்கேற்ப பிற மண்ணறை வாசிகளை விட சிறப்பாகப் பார்வையிடுவார்கள். மிக நீண்ட தூரங்களைக் காட்டும் தொலைகாட்டிகள் ஊடாகப் பார்ப்பதைப் போன்று மண்ணறைகளில் தமது அந்தஸ்துக்கேற்ப சுவனத்துச் சோலைகளைப் பார்த்து ரசிப்பார்கள்.

இதோ, இவ்வாறு மிகவும் ஒளிமயமானதும், மண்ணறையில் இருக்கும் போதே பிரபஞ்ச வெளியில் இருக்கும் சுவனச் சோலைகளைக் கண்டு ரசிக்கக் கூடியதுமான கண்களை, இந்தக் கண்களில் ஏற்படும் திரைக்குப் பின்னால் இறை நன்றி மற்றும் பொறுமை ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும். ஆம் அந்தத் திரையை உனது கண்களில் இருந்து அகற்றி அந்தக் கண்களால் உன்னைப் பார்க்க வைக்கக் கூடிய கண் வைத்தியர் சர்வ ஞானம் பொருந்திய குர்ஆன் ஆகும்.

**பதினைந்தாவது நிவாரணி**

கைசேதமே என்று முணுமுணுக்கும் நோயாளியே! நோயின் தோற்றத்தைப் பார்த்து ஆ! ஊ! என்று ஓலமிடுவதை நிறுத்து! அதன் அர்த்தத்தைப் பார்த்து ஆஹா! என்று சொல்! ஒரு வேளை நோயின் அர்த்தமானது அழகியதாக இல்லாதிருப்பின், அல்-ஹாலிகுர்ரஹீம் தனது அதி நேசத்துக்குரிய அடியானுக்கு நோய் நொடிகளைக் கொடுத்திருக்க மாட்டான். ஸஹீஹான ஹதீஸில் " اَشَدُّ النَّاسِ بَلاَءً اْلاَنْبِيَاءُ ثُمَّ اْلاَوْلِيَاءُ اْلاَمْثَلُ فَالاَمْثَلُ " என்று வருகின்றது.

அதாவது "மிக அதிகமாக முஸீபத்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாகுபவர்கள் மனிதர்களில் மிக நல்லவர்களும் உத்தமர்களுமாவர்." ஐயூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களிலிருந்து ஆரம்பித்து நபிமார்கள் பிறகு அவ்லியாக்கள் பிறகு நல்லடியார்கள் என்று அனைவருமே தாம் சந்தித்த நோய்நொடிகளைத் தூய வணக்கங்களாகவும் இறை அன்பளிப்புக்களாகவும் பார்த்துள்ளார்கள்; பொறுமையோடு நன்றி செலுத்தியுள்ளார்கள்; அல்-ஹாலிகுர்ரஹீமின் ரஹ்மத்திலிருந்துமுள்ள ஒரு வகை சத்திரசிகிச்சையாக கண்டு கொண்டார்கள். ஆ! ஊ!! என்று முணுமுணுக்கும் நோயாளியே! நீயும் இந்த ஒளிமயமான கூட்டத்தோடு சங்கமமாக ஆசையெனில் பொறுமையோடு நன்றி செலுத்து. அதுவன்றி முறைப்பட்டுக் கொள்பவனாக இருப்பாயெனில் அந்த உத்தமர்களின் அணியில் சேர்ந்து கொள்வதற்கான தகுதியை இழந்து விடுவாய்; பொடுபோக்குக் காரர்களோடு சேர்ந்து படுகுழிகளுக்குள் வீழ்ந்து விடுவாய்; இருண்டதொரு பாதையை தனதாக்கிக் கொள்வாய்.

ஆம், நோய்களுள் ஒரு சில இருக்கின்றன, ஒரு வேளை மரணத்தை விளைவாகத் தரும் எனில் ஒரு ஆத்மார்ந்த ஷஹீத் நிலைக்கு அதாவது ‘ஷஹாதத்’ போன்றதொரு ‘விலாயத்’ அந்தஸ்திற்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. இதற்கமைய குழந்தைப் பேற்றின் போது ஏற்படும் நோய்கள்,[3] வயிற்றோட்டம், மற்றும் நீரில் மூழ்குதல், கொலரா, அம்மை போன்றவற்றால் மரணிப்பவர்கள் ஆன்மீக ஷஹீத் ஆவதைப் போன்றே அதிகமான அருள்பாலிக்கப்பட்ட நோய்கள் ‘விலாயத்’ அந்தஸ்த்தை மரணத்தினால் ஈட்டிக் கொடுக்கின்றன. மேலும் நோய்கள் உலக மோகத்தையும் ஈடுபாட்டையும் குறைப்பதால், மரணம் காரணமாக, உலகாயுதவாதிகளின் பார்வையில் மிகவுமே வேதனையும் நோவினையும் மிக்கதாக இருக்கின்ற உலகை விட்டுமான பிரிவை இலகுபடுத்தும், சிலவேளை நேசிக்கவும் செய்யும் செய்யும்.

### பதினாறாவது நிவாரணி

தொந்தரவு காரணமாக முறைப்பட்டுக் கொள்ளும் நோயாளியே! நோய்நொடிகளானது மனிதனது சமூக வாழ்வின் ஈடேற்றத்திற்கு மிக முக்கியமானதாகவும் மிக அழகியதாகவும் இருக்கின்ற பரஸ்பரம் அன்பு மற்றும் மரியாதை போன்ற விடயங்களுக்கு உயிரூட்டுகின்றது. ஏனெனில் நோய்நொடிகள், மனிதனை கொடுமை இழைப்பதற்கும் இரக்கமின்மைக்கும் உந்துகின்ற தன்னிறைவு நிலையிலிருந்து பாதுகாக்கின்றது. ஏனெனில் “ اِنَّ اْلاِنْسَانَ لَيَطْغَى اَنْ رَآهُ اسْتَغْنَى ” என்ற மறை வசனத்தின் சாடையான கருத்துப்படி, ஆரோக்கியம் மற்றும் நிம்மதியிலிருந்து வரும் தன்னிறைவுக்கு ஆட்படும் ந∴ப்ஸுல் அம்மாராவானது, மரியாதைக்கும் கண்ணியத்துக்கும் அருகதையுள்ள ஏராளமான உறவுகளை பொருட்படுத்த மாட்டாது. மேலும், அன்பு மற்றும் ஆதரவின்பால் தேவையுள்ள கஷ்டத்தில் வீழ்ந்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இரக்கம் காட்டாது. அந்த ந∴ப்ஸானது எப்போது நோய்க்கு ஆட்படுகின்றதோ, அந்த நோயிலிருந்து தனது இயலாமையையும் பலவீனத்தையும் உணர்ந்து கொள்ளும்; மரியாதைக்கு அருகதையுள்ள உறவுகளுக்கு மதிப்பளிக்கும்; தன்னை சுகம் விசாரிக்கவும் தனக்காக உதவி ஒத்தாசை புரியவும் வரக்கூடிய மு∴மினான சகோதரர்களுக்கு மதிப்பளிக்கும். மேலும் அவர்களை தனது நிலையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமாக, மனிதாபிமானத்திலிருந்து வரும் பிற மனிதர்களுக்கு இரக்கம் செலுத்துதல் மற்றும் மிக முக்கியமானதொரு இஸ்லாமிய விழுமியமாக இருக்கின்ற கஷ்டவான்களுக்குக் கைகொடுத்தல் போன்ற பண்புகளின் யதார்த்தத்தை உணர்ந்தவனாக, அவர்களுக்காக உளப்பூர்வமாக வருத்தப்படுவான்; இரக்கம் காட்டுவான்; கைகூடுமெனில் உதவி ஒத்தாசையும் செய்வான்; எதுவுமே சாத்தியப்படவில்லை எனில் துஆ செய்வதன் மூலமாகவும் ஷரீஅத் படி சுன்னத்தாக இருக்கின்ற சுகம் விசாரிப்புக்காக சந்திக்கச் செல்வதன் மூலமாகவும் நன்மைகளைப் பெற்றுக் கொள்வான்.

### பதினேழாவது நிவாரணி

நோய் காரணமாக நல்லமல்கள் செய்ய முடியாததை எண்ணிக் கவலைப்படும் நோயாளியே! நன்றி செலுத்து, நல்லமல்களில் மிகத் தூயவைகளுக்கான வாயில்களை உனக்காகத் திறந்து விடுவது நோய்களாகும். நோய்களானது, சதாவும், நோயாளிகளுக்கும் அல்லாஹ்வுக்காக நோயாளிகளைப் பராமரிப்பவர்களுக்கும் ஏராளமான நன்மைகளை ஈட்டிக் கொடுப்பதோடு கூடவே, துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான மிகவும் ஏற்றமானதொரு சந்தர்ப்பமுமாகும். ஆம், நோயாளிகளைப் பராமரிப்பதனூடாக ஈமான் கொண்டவர்களுக்கு உயர்ந்த நன்மைகள் இருக்கின்றன. நோயாளியை வருத்தப்படுத்தாதிருக்கும் நிபந்தனையுடன் சுகம் விசாரிப்பதற்காக சந்திக்கச் செல்வது நபிவழியாகும். இது

---

[3] : இந்த நோய்கள் ஆத்மார்ந்த ஷஹீத் அந்தஸ்த்தை ஈட்டிக் கொடுப்பது குழந்தைப் பேற்றுக் காலமான நாற்பது நாற்கள் வரையிலாகும்.

பாவப்பரிகாரமாகக் கூட ஆகலாம். ஹதீஸில் “நோயாளியின் துஆவைப் பெற்றுக்கொள்ளுங்கள், அவர்களது துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.” என்று வருகின்றது. விஷேடமாக, நோயாளி உறவுகளில் இருந்துமெனில் இன்னும் விஷேடமாக தாய், தந்தையர் எனில், அவர்களுக்குப் பணிவிடை செய்வது மேலான நன்மைகளை ஈட்டித் தரக்கூடியதாக இருக்கின்றது. நோயாளியை மகிழ்விப்பது, ஆறுதல் கூறுவது என்பன ஏற்றமிக்க ஸதகா அந்தஸ்த்தைப் பெறும். பிள்ளைகளில் சிரேஷ்டமானவன் யாரெனில், தாய் தந்தையர் நோய்வாய்ப்பட்ட காலங்களில் விரைவாக உணர்ச்சிவசப்படும் அவர்களது உள்ளங்களை மகிழ்வித்து அவர்களது ஏற்றமான துஆக்களை பெற்றுக்கொள்பவன் ஆவான். ஆம், மனிதனின் சமூக வாழ்வில் மிக உன்னதமானதொரு சத்தியமாக இருக்கின்ற, தாய் தந்தையரின் அன்புக்குப் பகரமாக, அவர்கள் நோய்வாய்ப்படும் பொழுது பூரண மரியாதையோடும் கனிவோடும் பணிவிடை செய்வதால் அந்தப் பிள்ளை பெற்றுக்கொள்ளும் அந்தஸ்துக்களையும், அதிலிருந்து பிரதிபலிக்கும் மனிதத்தின் புனிதத்தன்மையையும் அந்தத் தூய காட்சி வாயிலாகப் பார்க்கும் மலக்குமார்கள் கூட “மாஷாஅல்லாஹ்”, “பாரகல்லாஹ்” என்று கூறி அந்தப் பிள்ளையை வாழ்த்துகின்றனர். ஆம், நோய்க் காலங்களில், நோயின் வேதனையை இல்லாமலாக்கக் கூடிய அளவு மிகவும் இனிமையும் ஆறுதலும் அளிக்கக் கூடியதான ஒரு விடயமாக சுற்றிவரப் பிரவாகிக்கும் அன்பு, ஆதரவு, கருணை என்பவற்றிலிருந்து வரும் இன்பங்கள் காணப்படுகின்றன.

நோயாளியுடைய துஆவின் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க தன்மை முக்கியமானதொரு விடயமாகும். நான் முப்பது – நாற்பது வருடங்களாக என்னிடமிருக்கும் ஒரு வகை கடுமையான கொலுகல் நோயிலிருந்து ஆரோக்கியம் பெறுவதற்காக துஆ செய்பவனாக இருந்தேன். பின்னர் அந்த நோய் துஆவுக்காக வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொண்டேன். துஆவைக் கொண்டு துஆவை, அதாவது துஆவானது தன்னைத் தானே அகற்றிக்கொள்ள முடியாது என்பதால், அந்த துஆக்களின் விளைவு மறுமை சார்ந்தது என்பதை விளங்கிக் கொண்டேன். மேலும் துஆ தன்னளவில் கூட ஒரு வணக்கமாகும். நோய்களூடாக தனது இயலாமையை புறிந்து கொண்ட மனிதன் இறை சந்நிதானத்தை நோக்கித் தஞ்சமடைந்து கொள்வான். இதன் காரணமாக முப்பது வருடங்களாக எனது ஆரோக்கியத்துக்காக நான் துஆ செய்த போதும், அந்த துஆக்கள் பார்வைக்கு ஏதோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்காக, துஆவை விட்டுவிடும் எண்ணம் எனது உள்ளத்தை அண்டவில்லை. கூடவே நோயானது துஆவுக்கான நேரமுமாகும். ஹகீம், ரஹீம் ஆகிய அல்லாஹ் நிவாரணத்தை அளிப்பான் எனில் அது அவனது பெருந்தன்மை காரணமாகவாகும். துஆ தான் விரும்பிய வகையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனில் துஆ அங்கீகரிக்கப்படவில்லை என்று கூற முடியாது. ஹாலிக் ஹகீம் ஆகிய அல்லாஹ் அனைத்தையும் மிக நன்றாக அறிந்தவனாகவே இருக்கின்றான்; எமது நலவுக்கு எது ஏற்றமானதோ அதைத் தருவான். சிலவேளை உலகம் சார்ந்த துஆக்களை எமது நலவுக்காக மறுமையை நோக்கித் திருப்பி விடுவான், அந்தக் கோணத்தில் ஏற்றுக் கொள்வான். எதுவாயினும்... நோயில் பொதிந்துள்ள இரகசியம் காரணமாக தூய்மை பெற்றதும், விஷேடமாக இயலாமயுடன் கூடிய பலவீனத்தோடும், தேவையுடன் கூடிய தாழ்மையுடனும் பிறக்கும் துஆ ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு மிகவும் நெருக்கமானதாகும். நோய்கள் இப்படிப்பட்ட தூய்மையான துஆவுக்கான காரணிகளாகும். மார்க்கத்தோடுள்ள நோயாளிகளும் நோயாளிகளைப் பராமரிக்கும் மு.்.மின்களும் இந்த துஆவிலிருந்து பயன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பதினெட்டாவது நிவாரணி**

இறை நன்றியை விட்டுவிட்டு முறைப்பட்டுகொண்டு அலையும் நோயாளியே! முறைப்பாடானது ஒரு உரிமையின் அடியாகத் தோன்றுகின்றது. முறைப்பட்டுக்கொள்வதற்காக உனக்குச் சொந்தமான எந்த வித உரிமையும் மீறப்படவில்லையே! மாறாக உன் மீது கடமையான ஆனால் நிறைவேற்றாத ஏராளமான நன்றிக்கடன்கள் இருக்கின்றன. அல்லாஹ்வுக்கான அந்தக் கடமைகளை நிறைவேற்றாமல் உரிமையற்ற விதத்தில் உரிமை கோரும் பாணியில் முறைப்பட்டுக் கொள்கின்றாய். நீ

உனக்கு மேலுள்ளவர்களில் இருக்கின்ற ஆரோக்கியவான்களைப் பார்த்து முறைப்பட்டுக் கொள்ள முடியாது. மாறாக ஆரோக்கிய விடயத்தில் உன்னை விட மோசமான நிலையில் உள்ளவர்களைப் பார்த்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளாய். உனது கையில் முறிவு இருக்கின்றது எனில் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ள கைகளைப் பார்; ஒரு கண் இல்லை எனில் இரண்டு கண்களுமே இல்லாதவர்களைப் பார்; உனது படைப்பாளனாகிய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து. ஆம் அருள்கள் விடயத்தில் தனக்கு மேலுள்ளவர்களைப் பார்த்து முறைப்பட்டுக்கொள்ள எந்த ஒருவனுக்கும் உரிமை கிடையாது. முஸீபத்களின் போது ஏதேனும் ஒரு உரிமை இருக்குமெனில் அது முஸீபத் விடயத்தில் தன்னை விட மோசமான நிலையில் உள்ளவர்களைப் பார்த்து அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதாகும்.

இதிலுள்ள இரகசியம் ரஸாஇலுன் நூரின் சில பகுதிகளில் ஒரு உதாரணம் மூலமாக நிறுவப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் பின்வருமாறு: ஒரு மகான், வக்கற்ற ஒருவனை, ஒரு கோபுரத்தின் உச்சிக்கு ஏற்றுகின்றார். கோபுரத்தின் ஒவ்வொரு படித்தட்டிலும் ஒவ்வொரு வேறுபட்ட அன்பளிப்புக்களை அருளுகின்றார். கோபுரத்தின் அதி உச்சத்தில் மிகப் பெரும் அன்பளிப்பை வழங்குகின்றார். அந்த விதவிதமான அன்பளிப்புக்களுக்குப் பகரமாக அவனிடமிருந்து நன்றியும் நன்றிக்கடனும் வேண்டப்படும் போது, அந்த அதி பிடிவாதக்கார மனிதனோ, அத்தனை படித்தட்டுக்களிலும் அடைந்துகொண்ட அத்தனை அன்பளிப்புக்களையும் மறந்து விட்டு அல்லது ஒன்றுமே நடக்காதது போல் மேல் நோக்கிப் பார்வையைச் செலுத்துகிறான். கைசேதமே! இந்தக் கோபுரம் இன்னும் உயரமானதாக இருந்திருக்க வேண்டுமே! இன்னுமின்னும் மேல் நோக்கிப் போயிருக்க வேண்டுமே! இந்தக் கோபுரம் அந்த மலையைப் போன்று அல்லது பிற கோபுரங்களைப் போன்று ஏன் உயரமானதாக இல்லை!? என்று புலம்பி முறைப்பட ஆரம்பித்தான். இது எப்படிப்பட்டதொரு அவலட்சனமான நிலையாகும்; அருட்கொடைகளுக்கான அவமரியாதையாகும் என்பதைக் கூற வேண்டியதில்லை. அவ்வாறே...

ஒரு மனிதன் இல்லாமையிலிருந்து இருப்பை அடைந்து அதிலும் கல்லாகவோ மண்ணாகவோ ஆகாது, மரமாகவோ மிருகமாகவோ ஆகாது, மனிதனாக ஆகி, அதிலும் முஸ்லிமாக ஆகி, அதிகமான காலம் சுகத்தோடும் தேகாரோக்கியத்தோடும் வாழ்ந்து உயர்தரமான உச்சமட்ட அருட்கொடைகளை அடையப்பெற்றிருக்கும் போது, உன்னிடமுள்ள சில குறைகள் காரணமாக சுகம் மற்றும் தேகாரோக்கியத்திற்கு நீ அருகதையற்றவனாக இருப்பதால் அல்லது பிழையான தெரிவு மற்றும் துஷ்பிரயோகம் காரணமாக ஆரோக்கியத்தையும் அருள்களையும் கைதவற விட்டு கைகூடாமல் போய் விட்டதால், உன்னை ஒரு முறை மீள்பரிசீலனை செய்வதற்குப் பதிலாக அல்லாஹ்வை முறைப்பட்டுக் கொள்வதும் பொறுமையிழப்பதும், “என்னதான் செய்தேன், அல்லாஹ் எனக்கு இப்படியும் செய்து விட்டானே!” என்று அல்லாஹ்வுடைய ருபூபிய்யத்தை நிந்தனை செய்வதும் உன்னிடமிருக்கும் உடலியல் நோயை விட மிக மோசமானதொரு முஸீபத் ஆகும்; ஒரு ஆன்மீக வியாதியாகும்.

முறிந்த கையோடு குத்துச் சண்டைக்கு இறங்குவது போன்று முறைப்பட்டுக்கொள்வதால் நோய் அதிகரிக்கும். புத்திசாலி யார் எனில், “ اَلَّذِينَ اِذَا اَصَابَتْهُمْ مُصِيبَةٌ قَالُوا اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُونَ ”

என்ற வசனம் சாடையாகக் கற்றுத்தரும் அர்த்தத்திற்கமைய அந்த நோய் தனது கடமையை முடித்துவிட்டுச் செல்லும் வரை சரணாகதியோடு பொறுமையை கைக்கொள்பவனாவான்.

### பத்தொன்பதாவது நிவாரணி

ஜெமீலு துல்ஜெலால் அகிய வல்லோன் அல்லாஹ் தனது அனைத்து நாமங்களையும், “அஸ்மாஉல் ஹுஸ்னா” என்ற பிரயோகத்தினூடாக குறிப்பிடுவதானது, அவனது அனைத்து நாமங்களும் அழகியவை என்பதனாலாகும். இருப்புக்களுக்குள் மிகவுமே இதமானதும்

அழகானதும் உள்ளடக்கமானதுமான ஸமதிய்யத் கண்ணாடி** ஹயாத், அதாவது வாழ்வாகும். அழகின் அழகைக் காட்டும் கண்ணாடியும் அழகியதாகும். அத்தோடு அழகின் ஆகர்ஷணங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போகப்போக அழகேறும். அந்தக் கண்ணாடியின் விதியில் அந்த அழகிலிருந்து எது வந்தாலும் அழகாக இருப்பதைப் போன்றே, ஹயாத்தின் விதியில் எது வந்தாலும் சத்தியத்தின் கோணத்தில் அழகியதாகும். ஏனெனில் அழகிய அந்த அஸ்மாஉல் ஹுஸ்னாக்களின் அழகிய இழைப்புக்களையும் கோர்ப்புக்களையும் பிரதிபலிப்புக்களையுமே காட்டுகின்றது. வாழ்வானது சதாவும் சுகத்தோடும் ஆரோக்கியத்தோடும் ஒரே நாதத்தில் செல்லுமெனில் குறையுள்ளதொரு கண்ணாடியாகிவிடும். சில வேளை, ஒரு கோணத்தில் அழிவு, இல்லாமை, சூன்யம் என்பவற்றை நினைவூட்டி தொந்தரவுபடுத்தும். வாழ்வின் பெறுமதியை குறைக்கும். ஆயுளின் இனிமையை நோவினையாக மாற்றும். சோம்பல் மேலீட்டால் நேரத்தை வேகமாக ஓட்டுவதற்காகப் பாவங்களையும் களியாட்டங்களையும் நாடுவான். பெறுமதிமிக்க ஆயுளோடு குரோதம் கொண்டு சிறைச்சாலைத் தவணையைப் போன்று வேகமாகக் கடத்திவிட்டு கடந்து செல்ல முயல்வான். ஆனால் மாற்றங்களோடும், இயக்கத்தோடும், பலதரப்பட்ட நிலமைகளோடும் உருண்டோடும் ஒரு வாழ்வானது வாழ்வின் பெறுமதியை உணர்த்துகின்றது; ஆயுளின் முக்கியத்துவத்தையும் இனிமையையும் அனுபவிக்கச் செய்கின்றது. கஷ்டத்திலும் முஸீபத்திலும் தான் உழன்றாலும் ஆயுள் கடந்து செல்வதை விரும்புவதில்லை. “இந்த சூரியன் இன்னும் மறையவில்லையே! அல்லது இரவு இன்னும் கடக்கவில்லையே!” என்று நச்சரித்து அங்கலாய்ப்பதில்லை. ஆம், மிகவும் செல்வந்தனான ஆனால் சோலிகள் எதுவுமின்றி அனைத்துமே பூரணத்துவமாகக் கிடைக்கப்பெற்ற நிலையில் பஞ்சணைகளில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் ஒரு மேங்குடியிடம் போய் “நிலமைகள் எவ்வாறு?” என்று கேள்! நிச்சயமாக “நேரம் செல்வதில்லை, வா! சற்று சதுரங்கம் ஆடலாம்” அல்லது “நேரத்தை ஓட்ட எங்கேனும் ஏதாவது களியாட்டத்துக்குச் செல்லலாம்” போன்ற கவலைக்கிடமான வார்த்தைகளை செவிமடுப்பாய்.. அல்லது தீராத மோகத்தால் வெளிப்படும் “இன்ன இன்ன பொருட்கள் குறைவாக இருக்கின்றன, அநியாயமே! இந்த விடயத்தையும் சாதித்திருந்தால்” போன்ற முறைப்பாடுகளை செவிமடுப்பாய். அதே போல், கஷ்டத்தில் வீழ்ந்த ஒருவர் அல்லது ஒரு தொழிலாளி அல்லது ஒரு உழைக்கும் ஏழையிடம் சென்று “நிலமைகள் எவ்வாறு?” என்று கேள். புத்தி பேதலித்தவனில்லை எனில் “புகழனைத்தும் அல்லாஹ்விற்கே உரித்தாகட்டும், நலமாக இருக்கின்றேன், உழைக்கின்றேன், சூரியஸ்தமனத்திற்கு முன் இன்ன இன்ன சோலிகளையும் முடித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே, காலம் வேகமாகச் செல்கின்றது, எமக்காக நிற்பதில்லை, ஏதோ சிறு சிறு கஷ்டங்கள் இருக்கின்றது தான். ஆனால் இதுவும் கடந்து விடும். கடந்து செல்லாத எதுதான் இருக்கின்றது?” போன்ற வார்த்தைகளினூடாக உண்மையில் காலம் எவ்வளவு பெறுமதியானது என்பதை அது கடந்து செல்வதால் ஏற்படுகின்ற கவலையினூடாக தெரியப்படுத்துவான். ஆம் கஷ்டம் மற்றும் உழைப்பினூடாக ஆயுளின் சுவையையும் வாழ்வின் பெறுமதியையும் விளங்கிக்கொள்கிறான். ஓய்வும் ஆரோக்கியமும் ஆயுளை வேதனைப் படுத்துகின்றது. ஆகவே தான் வேகமாகக் கடந்து சென்று விட வேண்டுமே என்று ஆசிக்கின்றான்.

நோயாளியான சகோதரா! அறிந்து கொள், ரஸாஇலுன் நூரின் பிற பகுதிகளில் விரிவுரைகளோடு உறுதியாக நிறுவப்பட்டதற்கினங்க; ஆன்மீக முஸீபத்கள், தீமைகள் ஏன் பாவங்களினதும் கூட அசலும் அடிப்படையும் இல்லாமை அல்லது சூன்யம் ஆகும். இல்லாமையானது சுத்தத் தீங்காகும், இருண்டதாகும். தொடர்ந்தேர்ச்சையான ஓய்வு, அமைதி, அசைவின்மை, செயற்பாடின்மை போன்ற நிலமைகள் சூன்யம், இல்லாமை என்பவற்றுடனான நெருக்கத்தின் காரணமாகத் தான் இல்லாமையிலிருக்கும் இருண்டகத்தை நினைவூட்டித் தொந்தரவு ஏற்படுத்துகின்றன. செயற்பாடும், மாற்றமும் மெய்நிலை அதாவது

---

** : அதாவது அல்லாஹ்வுடைய ஸமதிய்யத்தின் பிரதிபலிப்பிடம், அதாவது அல்லாஹ்வுடைய, எந்த ஒரு சந்தர்பத்திலும் எந்த ஒரு பொருளின் மீதும் தேவை அற்றவனாக இருக்கின்ற, ஆனால் அனைத்துப் பொருட்களும் சதாவும் அவன் மீது தேவை உடையனவாக இருக்கின்ற பண்பின் பிரதிபலிப்பிடம்.

வுஜூத் ஆகும்; வுஜூதை நினைவூட்டும். வுஜூத் ஆனது தூய நலவாகும்; ஒளியாகும். ஆக உண்மை இதுவென்பதால், உன்னிடமிருக்கும் நோயானது பெறுமதிமிக்க வாழ்வை தூய்மைப்படுத்தி, பலப்படுத்தி, உயர்ச்சி அடையச் செய்து, உடலிலிருக்கும் பிற அவயங்களை அந்த நோய்வாய்ப்பட்ட அவயத்தைச் சூழ ஒத்துழைப்பு வழங்கும் விதமாக ஒன்றுதிரட்ட வைத்து, சர்வஞானம் பொருந்திய வடிவமைப்பாளனாகிய அஸ்-ஸானிஉல் ஹகீம் உடைய வெவ்வேறு நாமங்களின் தொழிற்பாடுகளைப் பிரதிபலிக்கச் செய்து, பல்வேறுபட்ட கடமைகளைச் சுமந்ததாக உனது உடம்புக்கு விருந்தினராக அனுப்பப்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் அந்த நோய் விரைவாக தனது கடமையை நிறைவேற்றி விட்டுச் செல்லும். செல்லும் போது ஆரோக்கியத்திடம் கூறும்; ‘‘இனி உனக்கான நேரம் வந்து விட்டது, என்னுடைய இடத்தில் தங்கி இருந்து உனது கடமையை நிறைவேற்று, இனி இந்த இல்லம் உனக்குறியதாகும், சுகமாக அமர்ந்து கொள்.’’

**இருபதாவது நிவாரணி**

நிர்க்கதிக்கு நிவாரணம் தேடும் நோயாளியே! நோய் இரண்டு வகையானதாகும். ஒரு வகை உண்மையானதும் இன்னுமொரு வகை மாயையானதுமாகும். உண்மையான வகையானது, நிவாரணமளிப்பவனகிய அஷ்-ஷா.்.பிஉல் ஹகீமு துல்ஜலால் அல்லாஹ், மாபெரும் மருந்தகமான பூமிப்பந்தில் அனைத்து விதமான நிர்க்கதிகளுக்குமான நிவாரணிகளை பரப்பி வைத்துள்ளான். அந்த நிவாரணிகளானது நிர்க்கதிகளைம், நோய்நொடிகளையும் வேண்டி நிற்கின்றன. ஒவ்வொரு நிர்க்கதிக்கும் ஒவ்வொரு நிவாரணியை படைத்துள்ளான். ஆக நிவாரணத்திற்காக மருந்தை எடுப்பதும் பயன்படுத்துவதும் ஆகுமாக்கப்பட்டதாகும். ஆனால் விளைவையும் ஆரோக்கியத்தையும் அல்லாஹ்வின் புறமிருந்தும் அறிந்து கொள்வது கட்டாயமாகும். நிர்க்கதியை வழங்கியதைப் போன்றே நிவாரனத்தையும் சுகத்தையும் கூட அவனே வழங்குகின்றான். நிபுணத்துவம் வாய்ந்த மார்க்கமுள்ள வைத்தியர்களின் ஆலோசனைகளை கடைப்பிடிப்பது முக்கியமானதொரு மருந்தாகும். ஏனெனில் அதிகமான நோய்கள் துஷ்பிரயோகம், வீண்விரயம், கட்டுப்பாடின்மை என்பவற்றாலும், தவறுகள், அவதானமின்மை என்பவற்றாலும், பாவங்களாலுமே ஏற்படுகின்றன. மார்க்கமுள்ள வைத்தியர், நிச்சயமாக ஆகுமாக்கப்பட்ட எல்லைக்குள் ஆலோசனைகள் வழங்குவார். துஷ்பிரயோகம், வீண்விரயம் என்பவற்றை விட்டும் தடை போடுவார் ஆறுதலளிப்பார். நோயாளி அந்த ஆறுதலை, ஆதரவைக் கைப்பிடித்து நோயிலிருந்து தேற்றம் பெறுவார். நோவினை அடைந்த இடம் நிம்மதியால் நிரம்பும்.

ஆனால் மாயையான வகையைப் பொருத்தவறையில், அதற்கான மிகவும் வினைத்திறன் மிக்க மருந்து முக்கியத்துவம் அளிக்காதிருப்பதாகும். முக்கியத்துவமளிக்க அளிக்க அந்த நோய் ஊதிப் பெரிதாகும். முக்கியத்துவமளிக்காத போது சிறிதாகி களைந்து சென்று விடும். எவ்வாறு, தேனீ மற்றும் பூச்சிக்களோடு மல்லுக்கட்ட மல்லுக்கட்ட முகத்தைச் சுற்றி வட்டாரமிட்டுக் கொண்டே இருக்க, பொருட்படுத்தாது அப்படியே விட்டு விட்டால் தொலைந்து விடுகின்றன. அதேபோன்று காரிருளில் கண்ணிற்கு முன்னால் அசையும் ஒரு கயிற்றிலிருந்து தோற்றம் பெரும் பிரமைக்கு முக்கியத்துவமளிக்க அளிக்க வீக்கமெடுத்து அவனை பைத்தியம் பிடித்தவனைப் போன்று புத்தி பேதலிக்கச் செய்யும் நிலைக்கு ஆலாக்கும். ஆனால் முக்கியத்துவமளிக்காது விட்டு விட்டால் அந்த சாமான்யமான கயிறு ஒரு பாம்பு அல்ல என்பதைக் கண்டு கொள்வான்; அந்தப் பிரமையைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பான். இந்த மாயையான நோய் நீண்ட காலம் தொடருமெனில் உண்மையானதாக உருமாறி விடும். மாயையான சந்தேகம், கோபக்கார மனிதனிடம் இருக்கும் மிக மோசமானதொரு நோயாகும். அணுவை அண்டமாக மாற்றும்; ஆன்ம பலத்தைக் குன்றச் செய்து விடும். அத்தோடு விஷேடமாக கருணையற்ற அறை வைத்தியர்களிடம் அல்லது மனிதாபிமானமற்ற வைத்திய வேக்காடுகளிடம் சென்று மாட்டிக்கொண்டால், அந்த மாயைக்கு எண்ணையூற்றி மென்மேலும் பூதாகரப்படுத்தி விடுவர். நோயாளி செல்வந்தனாயின் அவனது செல்வம் போய் விடும், இல்லையேல் ஒன்றோ புத்தி பேதலிக்கும் அல்லது எஞ்சிய ஆரோக்கியமும் போய்விடும்.

## இருபத்தி ஓராவது நிவாரணி

நோயாளியான சகோதரனே! உனது நோயில் உடலியல் ரீதியான ஒரு வேதனை இருக்கின்றது, ஆனால் அந்த உடலியல் வேதனையின் எதிர் விளைவை அழித்து விடக் கூடிய முக்கியமானதொரு ஆத்மார்த்த இன்பம் உன்னைச் சூழ்ந்து கொள்கின்றது. ஏனெனில் உனது தாய் தந்தையர், உறவினர்கள் உயிர் வாழ்கின்றார்கள் எனில், நீண்ட காலத்துக்கு முன்னமே நீ மறந்து போன, தேன் போன்று தெவிட்டும் அவர்களது அன்பு உன்னைச் சூழ மீண்டும் களைகட்ட ஆரம்பிக்கும். குழந்தைப் பருவத்தில் கண்ட அந்த அன்பு தோய்ந்த பார்வைகளை மீண்டும் கண்டு கொள்வாய். மிகவும் மறைவானதாக ஆகி ஒரு வகை திரையிடப்பட்டிருந்த சூழவுள்ள நட்புக்கள், நோய் காரணமாக உன்னை ஆதரவோடு அரவணைக்கும். இவற்றிட்கு முன்னால் நிச்சயமாக உனது இந்த உடலியல் வேதனை மிகவும் மலிவானதாக ஆகி விடும். மேலும் நீ நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பணிவிடை செய்து நெருக்கங்களை சம்பாதித்துக் கொள்ள முயன்ற பெரியவர்கள், நோய் காரணமாக உனக்குப் பணிவிடை செய்வதன் மூலமாக பெரியவர்களுக்கெல்லாம் பெரியவனாகி விடுவாய். மேலும் மனிதர்களிடம் காணப்படும் மனிதாபிமானத்தையும், பரஸ்பர நேசத்தையும் உன்னை நோக்கி ஈர்த்ததன் மூலமாக செலவின்றி ஏராளமான உதவியாளர்களையும், நண்பர்களையும், இரக்கமுள்ள தோழர்களையும் பெற்றுக் கொண்டாய். மேலும் கடும் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலிருந்து நீ ஏங்கிக்கொண்டிருந்த விடுமுறைக்கான அனுமதியை இந்த நோயிலிருந்து பெற்றுக் கொண்டு சற்று ஓய்வெடுக்கின்றாய். ஆக நிச்சயமாக, உனது இந்த சிறிய வேதனை, மேற்படி ஆத்ம இன்பங்களுக்கு முன்னால் உன்னை முறைப்பட்டுக்கொள்வதற்காக அன்றி நன்றி செலுத்துவதற்காகவே அழைப்பு விடுக்கின்றது.

## இருபத்தி இரண்டாவது நிவாரணி

பாரிஸவாதம் போன்ற கடுமையான நோய்களுக்கு ஆளாகியுள்ள சகோதரனே! முதலில், பாரிஸவாதம் போன்ற நோய்கள் மு.ஃமின்களுக்கான ஒரு அருட்கொடையாக இருக்கின்றது என்பதை உனக்கு நன்மாராயனம் கூறுகிறேன். இந்த விடயத்தை நீண்ட காலமாக அஹ்லுல் விலாயத்திடமிருந்து செவிமடுப்பவனாக இருந்த போதிலும் அதன் இரகசியத்தினை அறியாதிருந்தேன். ஒரு இரகசியம் பின்வருமாறு உள்ளத்திற்கு வருகின்றது: இறை நேசர்கள், அல்லாஹ்வை நெருங்குவதற்காகவும் உலகிலுள்ள பயங்கரமான ஆன்மீக சார் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்வதற்காகவும் நித்திய நிம்மதியை அடைந்து கொள்வதற்காகவும் இரண்டு அடிப்படைகளை தெரிவு செய்து பேணி வந்துள்ளனர். முதலாவது: மரணத்தை சிந்தித்தல். அதாவது உலகம் தற்காலிகமானது என்பதைப் போல், தானும் அதனுள் பொறுப்புக்களை சுமந்த தற்காலிகமானதொரு விருந்தாளி என்பதை சிந்தித்து, நித்திய வாழ்வின் விமோசனத்துக்காக உழைத்துள்ளனர். இரண்டாவது: ந.ஃப்ஸுல் அம்மாராவினதும் குருட்டு இச்சைகளினதும் தீங்குகளை விட்டுப் பாதுகாப்புப் பெற்றுக் கொள்வதற்காக கஷ்டங்களையும் துறவையும் தெரிவு செய்து ந.ஃப்ஸுல் அம்மாராவை மரணிக்கச் செய்ய முனைந்துள்ளனர்.

இதோ அரை உடலின் ஆரோக்கியத்தை இழந்து விட்ட சகோதரா! உனது நாட்டம் இன்றியே குறுகியதும், இலகுவானதும், விமோசனத்துக்குக் காரணியாகவும் இருக்கின்ற இந்த இரண்டு அடிப்படைகளும் உனக்கு அருளப்பட்டுள்ளது. எவ்வாறெனில் தொடர்ந்தேர்ச்சையாக உனது உடலின் நிலமை, உலகின் முடிவையும் மனிதன் அழிந்து போகக்கூடியவன் என்பதையும் நினைவூட்டுகின்றது. இனிமேலும் உலகம் உன்னை தனது வலையில் வீழ்த்த முடியாது; பொடுபோக்கு உனது கண்களை குருடாக்கி விடாது. மேலும் அரை மனிதன் நிலையிலுள்ள ஒரு மனிதனை, ந.ஃப்ஸுல் அம்மாரா, இழிந்த இச்சைகளைக் கொண்டும் ந.ஃப்ஸானியத்தான ஆசைகளைக் கொண்டும் நிச்சயமாக ஏமாற்ற முடியாது. எனவே விரைவாக அந்த ந.ஃப்ஸின் தொல்லைகளிலிருந்து மீட்சி பெறுவான்.

ஆம் மு.ஃமின் தன்னிடமுள்ள ஈமானின் இரகசியத்தினாலும், சரணாகதி நிலை, தவக்குல் என்பவற்றினூடாகவும் அந்தக் கடும் வேதனை மிக்க பாரிஸவாதம் போன்ற

நோய்களிலிருந்து குறுகிய காலத்தில் அவ்லியாக்கள் இன்னல்களில் இருந்து ஈடேற்றம் பெறுவதைப் போன்று விமோசனம் பெற்றுக்கொள்ள முடியும். அப்போது அந்த வேதனைமிக்க நோய் சர்வ சாதாரணமானதாக மாறிவிடும்.

## இருபத்தி மூன்றாவது நிவாரணி

அநாதரவாக தனிமையில் வாடும் நாதியற்ற நோயாளியே! நோயுடன் கூடவே உனது அநாதரவான நிலையும் தனிமையும் மிகக் கடினமான உள்ளங்களையும் கூட கரைய வைத்து அவர்களது இரக்கம் தோய்ந்த பார்வையை உன்னை நோக்கி ஈர்க்கும் போது, குர்ஆனின் அனைத்து அத்தியாயங்களினதும் ஆரம்பத்தில் ரஹ்மானுர்ரஹீம் நாமத்தினூடாக தன்னை எமக்கு அறிமுகப்படுத்தி, தனது உன்னத கருணையின் ஒரு கீற்றாக ஒட்டுமொத்த பாலகர் குலத்தையும் ஒட்டுமொத்த தாய்க் குலத்திற்கும் அளித்திருக்கும் பிரமாதமான அன்பைக் கொண்டு அரவணைத்து, ஒவ்வொரு வசந்தத்திலும் தனது மகா கருணையின் ஒரு பிரதிபலிப்பாக பூமிப்பந்தை அருட்கொடைகளால் ததும்பச் செய்து, அனைத்துக்கும் மேலாக சுவனத்தை நித்தியமான ஒரு வாழ்வுக்காக அனைத்து விதமான அருள்பாக்கியங்களினாலும் நிரம்பப் பெற்ற அன்பின் தேசமாக ஆக்கி வைத்த அந்த அல்-ஹாலிகுர்ரஹீம் ஆகிய அல்லாஹ்வின் கருணை நிச்சயமாக உன்னுடனேயே இருக்கின்றது. அவனை அறிந்து அவனோடு ஈமான் ஊடாக உன்னைப் பிணைத்துக் கொண்டு நோயின் இயலாமை மொழியினூடாக அவனிடம் இறைஞ்சுவதானது, உனது இந்த அநாதரவான தனிமை நிலையில், நிச்சயமாக அவனது கருணைப் பார்வையை உன்னை நோக்கி ஈர்க்கும். ஆம் அவனது இருப்பு சந்தேகமற உறுதியானதாகும். அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். ஆக உனக்காக அனைத்துமே இருக்கின்றது. யதார்த்ததில் அநாதரவாகவும், தனிமையிலும் இருப்பவன் யாரெனில், ஈமான் மற்றும் சரணாகதியோடு அவனை நெறுங்கி அவனோடு பிணைந்து கொள்ளாத, அவனைப் பற்றி கருத்திற்கொள்ளாத மனிதனாவான்.

## இருபத்தி நான்காவது நிவாரணி

அப்பாவியான நோயாளிக் குழந்தைகளையும் அப்பாவிக் குழந்தைகள் நிலையிலுள்ள வயோதிபர்களையும் பராமரிக்கும் பராமரிப்பாளர்களே! உங்களுக்கு முன்னால் உன்னதமானதொரு மறுமை வியாபாரம் இருக்கின்றது. ஊக்கத்தோடும் உழைப்போடும் அந்த வியாபாரத்தை வெற்றியீட்டிக் கொள்ளுங்கள். அப்பாவிக் குழந்தைகளுக்கு வரும் நோய்கள், அந்த நலினமான உடல்களிற்கான ஒரு பயிற்சியாகவும் ஒருவகைத் துறவரமாகவும் இருப்பதோடு எதிர்காலத்தில் எதிர்கொள்ள இருக்கும் உலகின் கொந்தளிப்புக்களைத் தாக்குப்பிடிப்பதற்கான ஒரு பலமூட்டியாகவும் ஒரு இறை பயிற்றுவிப்பாகவும் இருந்து குழந்தையின் உலக வாழ்க்கை சார்ந்த பல்வேறு ஞானங்களைத் தன்னகத்தே பொதியப்பெற்றுள்ளது. கூடவே நோய்களானது, வயோதிபர்களின் ஆன்மீக வாழ்க்கை விடயத்தில் கடந்து சென்ற வாழ்க்கையை தூய்மைப்படுத்தும் ஒரு பாவப்பரிகாரமாக இருக்கின்றது. இவ்வாறே குழந்தைகள் எதிர்காலத்திலும் மறுமையிலும் அடைய உள்ள ஆன்மீக ஏற்றத்திற்கான உந்து சக்தியாகவும் நோய்கள் இருக்கின்றன. எனவே நோய்களிலிருந்து வரும் இப்படிப்பட்ட நன்மைகள் தாய் தந்தையரின் நல்லமல்கள் பதிவேட்டிலும் விஷேடமாக குழந்தையின் ஆரோக்கியத்துக்காகத் தனது ஆரோக்கியத்தைப் பணயம் வைக்கும் தாயின் மிக அழகிய அமல்கள் பதியப்படும் பக்கத்திலும் பதியப்படும் என்பது அஹ்லுல் ஹகீகத் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டதாகும். வயோதிபர்களைப் பராமரிப்பதைப் பொருத்தவரை ஒரு புறம் உயர்ந்த நன்மைகளைப் பெற்றுத்தருவதோடு கூடவே அந்த வயோதிபர்களின் குறிப்பாக, அவர்கள் பெற்றோர்களாக இருப்பின் அவர்களின் துஆக்களை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கின்றது. மேலும் அவர்களது உள்ளங்களை பூரிப்படையச் செய்வதும் அவர்களுக்காகத் தியாகத்தோடு பணிவிடை செய்வதும் உலக மற்றும் மறுமை ஈடேற்றத்துக்குக் காரணமாக இருக்கின்றது என்பதற்கு ஸஹீஹான அறிவிப்புக்களும் பல்வேறு வரலாற்று நிகழ்வுகளும் சான்றாக இருக்கின்றன. வயதான தாய் தந்தைக்கு

பூரணமாகக் கட்டுப்படும் பாக்கியசாலியான ஒரு மகன் தனது மகனிடமிருந்தும் அதே நிலையை அனுபவிப்பது போன்றே பெற்றோரை நோவினை செய்யும் அபாக்கியசாலியான ஒரு மகன் மறுமை வேதனைக்கு முன்னர், உலகிலேயே பல்வேறு வேதனைகளுக்கு ஆளாகி தண்டனை அனுபவிப்பான் என்பதற்கு ஏராளமான நிகழ்வுகள் சான்றாகும். ஆம் ஈமான் கொண்ட எவரேனும் முதியவர்களை அல்லது அப்பாவியானவர்களை (உறவுகளுக்கு அப்பாலாயினும் சரியே) சந்திக்க நேரிட்டு, கண்ணியத்திற்குறிய அந்த வயோதிப நோயாளியும் உதவி ஒத்தாசைக்குத் தேவையுடையவராக இருப்பின் ஆத்ம திருப்தியோடு அவர்களுக்கு பணிவிடை செய்வது இஸ்லாத்தின் வலியுறுத்தலாகும்.

## இருபத்தி ஐந்தாவது நிவாரணி

நோயாளியான சகோதரர்களே! நீங்கள் மிகவும் பயனுள்ள, அனைத்து நிர்க்கதிகளுக்கும் நிவாரணியான, உண்மையான இன்பத்தை தரக்கூடிய, புனிதமானதொரு சஞ்சீவியை வேண்டுகின்றீர்கள் எனில் உங்கள் ஈமானை அதிகரித்துக் கொள்ளுங்கள். அதாவது தௌபா, இஸ்தி.ஃபார், தொழுகை மற்றும் வணக்க வழிபாடுகளினூடாக அந்த உன்னத ஔடதமான ஈமானையும் ஈமானிலிருந்து வரும் நிவாரணிகளையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஆம் உலக மோகம் மற்றும் உலகத்துடனான அதீத தொடர்பு காரணமாக பொடுபோக்குக் காரர்களிடம் உலகம் போன்ற பிரமாண்டமான, நோய்வாய்ப்பட்ட ஒரு ஆத்மார்ந்த உடல் காணப்படுகின்றது. ஈமான் ஆனது அழிவு மற்றும் பிரிவால் ஏற்படும் பயங்கர வேதனைகளால் வதைப்பட்டு நிர்க்கதி நிலையில் தவிக்கும் அந்த உலகம் போன்ற ஆத்மார்ந்த உடலுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கி, அந்த நிர்க்கதி நிலையிலிருந்து மீட்டெடுத்து, உண்மையான ஆரோக்கியத்தை வழங்குகின்றது என்பதை ரஸாஇலுன் நூரின் பல்வேறு பாகங்களில் சந்தேகத்துக்கிடமின்றி நிறுவியுள்ளோம்.

தலைக்குப் பாரமாக இருந்து விடக்கூடாது என்பதற்காக சுருக்கிக்கொள்கிறேன். ஈமானிய மருந்தானது முடியுமானவரை அனைத்து பர்ள்களையும் நிறைவேற்றுவதனூடாக பிரதிபலனளிக்கின்றது. மாறாக பொடுபோக்குத்தனம், பாவங்கள், ந.ஃப்ஸின் இச்சைகளுக்கு அடிபணிதல், களியாட்டங்கள் என்பன அந்த சஞ்சீவியின் வினைத்திறனை மழுங்கடிக்கும். ஆக நோய்கள் உண்மையிலேயே பொடுபோக்குத் தனத்தை களைக்கின்றது; அதீத மோகத்தை அணைத்து விடுகின்றது; ஹராமான கேளிக்கை, களியாட்டங்களிற்குச் செல்வதற்கான தடையாக இருக்கின்றது. ஆகவே அதிலிருந்து பூரண பயனை பெற்றுக்கொள்ளுங்கள். உண்மையான ஈமானின் உன்னதமான நிவாரணிகளில் இருந்தும் ஒளியிலிருந்தும் தவ்பா மற்றும் இஸ்தி.ஃபார் ஊடாகவும் தொழுகை மற்றும் துஆ ஊடாகவும் பயன் பெற்றுக்கொள்ளுங்கள். சர்வலோக இரட்சகன் உங்களுக்கு நல்லாரோக்கியத்தை தந்தருள்வானாக, உங்கள் நோய்களை பாவப்பரிகாரமாக ஆக்கிவைப்பானாக. ஆமீன் ஆமீன் ஆமீன்..

وَقَالُوا الْحَمْدُ لِلّٰهِ الَّذِى هَدَينَا لِهٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِىَ لَوْلاَ اَنْ هَدَينَا اللّٰهُ لَقَدْ جَاءَتْ رُسُلُ رَبِّنَا بِالْحَقّ

سُبْحَانَكَ لاَ عِلْمَ لَنَا اِلاَّ مَا عَلَّمْتَنَا اِنَّكَ اَنْتَ الْعَلِيمُ الْحَكِيمُ

اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ طِبِّ الْقُلُوبِ وَدَوَ

பதினேழாவது கடிதம் (இருபத்தி ஐந்தாவது மின்னலின் இணைப்பு)

(குழந்தையை இழந்தவருக்கான தேற்றக் கடிதம்.)

بِاسْمِهِ وَاِنْ مِنْ شَيْءٍ اِلاَّ يُسَبِّحُ بِحَمْدِهِ

கண்ணியத்திற்குறிய மறுமைச் சகோதரன் ஹா.்.பிஸ் ஹாலித் அவர்களே!

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

وَبَشِّرِ الصَّابِرِينَ * اَلَّذِينَ اِذَا اَصَابَتْهُمْ مُصِيبَةٌ قَالُوا اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُونَ

சகோதரனே! தங்கள் குழந்தையின் மரணம் என்னையும் பாதிப்புக்குள்ளாக்கியது. ஆனால் اَلْحُكْمُ لِلّٰهِ விதியின் தீர்ப்பைப் பொருந்திக் கொள்தல், கதரிடம் சரணடைதல் என்பன இஸ்லாத்துக்கென்றே உள்ள தனித்துவப் பண்புகளாகும். வல்லோன் அல்லாஹ் உங்களுக்கு அழகிய பொறுமையைத் தந்தருள்வானாக. மரணித்த அந்தக் குழந்தையையும் உங்களுக்கான மறுமைச் சொத்தாகவும், மறுமையில் பரிந்துரையாளனாகவும் ஆக்கிவைப்பானாக. உங்களுக்கும் உங்களைப் போன்ற முத்தகீயான மு.்.மின்களுக்கும் பெரியதொரு சுபசோபனத்தையும் உண்மையானதொரு ஆறுதலையும் தரக் கூடிய ஐந்து குறிப்புக்களைத் தெளிவு படுத்துகின்றோம்.

**முதலாவது குறிப்பு**

சர்வஞானமிக்க குர்ஆனில் வரும் وِلْدَانٌ مُخَلَّدُونَ என்ற சுபசோபனத்துடைய இரகசியமும் அர்த்தமும் பின்வருமாறு: இந்த வசனமானது, வயதுக்கு வர முன்னர் மரணிக்கும் பிள்ளைகள் சுவனத்தில் நித்தியமாக, மிகவும் நேசத்திற்குறியவர்களாக, சுவனத்தின் கண்ணியத்திற்கேற்றாற் போன்ற அமைப்பில் தொடர்ந்தும் பிள்ளைகளாகவே இருக்கப் போவதையும்.. சுவனம் செல்லும் தாய் தந்தையரின் மடிகளில் நித்தியக் கண்குளிர்ச்சிக் காரணிகளாக இருக்கப் போவதையும்.. சுவனத்தில் பிள்ளைகளுடனான கொஞ்சல்கள். மழலை நேசம் போன்ற மிகவும் இதமான ஒரு இன்பத்தை பெற்றோருக்கு வழங்குவதற்கான காரணிகளாக இருக்கப் போவதையும்.. சுவனத்தில் அனைத்து விதமான இன்பங்களும் இருக்கின்றது என்பதற்கான சுபசோபனமாகவும் இருக்கின்றது. கூடவே.. ''சுவனம் இனப்பெருக்கத்திற்கான இடம் அல்ல என்பதால், பிள்ளைப் பாசம், மழலைகளுடனான கொஞ்சல்கள் போன்ற இன்பங்கள் அங்கு கிடையாது'' என்று கூறுபவர்களின் தீர்ப்புக்களில் எந்த வித உண்மைத் தன்மையும் கிடையாது என்பதையும்.. உலகில் பத்து வருடங்கள் குறுகியதொரு காலத்தில் கஷ்ட துண்பங்களுடன் கூடிய பிள்ளைப் பாசம் மற்றும் கொஞ்சல்களுக்குப் பதிலாக வேதனைகளோ கலப்படமோ அற்ற மில்லியன் கணக்கான வருட நித்திய இன்பத்தையும் பிள்ளைகளுடனான மலலை சம்பாஷனைகள், குதூகலம் என்பவற்றையும் ஈமான் கொண்டவர்கள் பெற்றுக் கொள்வார்கள் என்பதை இந்த ஆயத் وِلْدَانٌ مُخَلَّدُونَ வசனத்தினூடாக சாடையிட்டு சுபசோபனம் கூறுகின்றது.

**இரண்டாவது குறிப்பு**

ஒரு சமயம் ஒரு மனிதர் சிறைப்படுத்தப்பட்டிருந்தார். அவருடைய அழகிய குழந்தையும் அன்னாரிடம் அனுப்பப்பட்டிருந்தது. அந்த நாதியற்ற சிறைவாசி தனது வேதனையை அனுபவிக்கின்ற அதே சமயம் தனது மகனுக்கு ஒரு நல்வாழ்வை அளிக்க முடியாததை எண்ணி, அவனது கஷ்டத்தையிட்டும் வேதனை அடைபவராக இருந்தார். பிறகு இரக்க

உள்ளம் கொண்ட அரசன் அவனிடம் ஒரு தூதுவனை அனுப்பி "இந்தப் பிள்ளை உண்மையில் உனது மகனாகும், ஆனால் எனது அதிகாரத்தின் கீழ் எனது தேசத்தைச் சேர்ந்தவனாகும். நான் அவனை எடுத்து அழகியதொரு மாளிகையில் வளர்க்கப் போகிறேன்" என்று கூறினார். அந்த மனிதனோ ஓலமிட்டு அழ ஆரம்பித்தான். "எனது கண்குளிர்ச்சியான மகனைத் தர மாட்டேன்." என்று புலம்பினான். அவனது நண்பர்கள் அவனிடம் "உனது இந்தப் புலம்பல்கள் அர்த்தமற்றது, நீ உண்மையிலேயே உனது மகன் மீது அனுதாபப்படுகின்றாய் எனில் அவனை இந்த அழுகி நாற்றமெடுக்கும் நோவினை மிக்க சிறைச்சாலையிலிருந்து நிம்மதியும் சந்தோஷமும் மிக்க ஒரு மாளிகைக்கு செல்வதற்கு அனுமதி! மாறாக நீ உனது நஃப்ஸிற்கு அடிமைப்பட்டு நஃப்ஸின் சுய நலத்திற்காக மகனை இங்கு தடுத்துக்கொண்டால் தற்காலிகமான சிறியதொரு நலவுடன் கூடவே மகனின் கஷ்டங்களைக் கண்டு அதிகமதிகம் நோவினையும் வேதனையும் அடைவாய். அவன் அங்கே சென்றால் உனக்கு ஆயிரம் நலவுகள் காத்திருக்கின்றன. ஏனெனில் அரசனின் கருணையை உன்பக்கம் ஈர்ப்பதற்கான காரணியாக அவன் அமையலாம்; உனக்கான பரிந்துரையாளனாக மாறிவிடலாம். அரசன் பிள்ளையை உன்னுடன் சந்திக்க வைக்க விரும்புவார். நிச்சயமாக அந்த சந்திப்புக்காக உனது மகனை சிறைக்கு அனுப்ப மாட்டார், மாறாக உன்னை சிறையிலிருந்து விடுவித்து அந்த மாளிகையில் பிள்ளையுடன் சந்திக்க வைப்பார். ஆனால் இவையெல்லாம் பாதுஷாஹ்விற்கு நம்பிக்கைக்குரியவனாகவும் கட்டுப்படுபவனாகவும் இருக்கும் நிபந்தனையுடனாகும்.." என்று கூறினர்.

இதோ இந்த உதாரணத்தைப் போன்று, கண்ணியத்திற்குறிய சகோதரா, உன்னைப் போன்ற முஃமினானவர்களின் குழந்தைகள், பிள்ளைகள் வபாத்தாகினால் பின்வருமாறு சிந்திக்க வேண்டும். இந்தக் குழந்தை பாவமறியாததாகும், அதன் படைப்பாளனோ ரஹீமாகவும் கதீராகவும் இருக்கின்றான். எனது குறைபாடுமிக்க ஆதரவுக்கும் பராமரிப்புக்கும் பதிலாக பரிபூரணத்துவமிக்க அவனது ரஹ்மத்துக்குள்ளும் உவகைக்குள்ளும் தஞ்சம் கொடுத்திருக்கின்றான். நோவினையும் வேதனைகளும் கஷ்டங்களும் சூழ்ந்த உலக சிறையிலிருந்து விடுவித்து ஜென்னதுல் ஃபிர்தெளஸிற்கு அனுப்பியிருக்கின்றான். அந்தப் பிள்ளையின் மகிழ்ச்சிக்கு தடைகள் தான் ஏது!? இந்த உலகில் தங்கியிருப்பின், யாரறிவார் எப்படிப்பட்டவனாக ஆகியிருப்பான் என்பதை? எனவே நான் அந்தப்பிள்ளைக்காக வருந்த மாட்டேன், அவனை பாக்கியசாலியாகக் காண்கின்றேன். எனது நஃப்ஸின் சுய நலத்துக்காக என் மீது கூட அனுதாபப்பட மாட்டேன், வேதனைப்பட்டு ஓலமிட மாட்டேன். ஏனெனில் உலகில் நீடித்திருப்பின், பத்து வருடங்கள் கழிந்து பார்த்தால் தற்காலிகமான வேதனைகளோடு கூடிய ஒரு இன்பத்தையே எனக்கு வழங்கியிருப்பான். ஸாலிஹான பிள்ளையாக வளர்ந்து உலக விடயங்களிலும் தேர்ந்தவனாக இருந்திருப்பின் சில வேளை எனக்கு உதவி ஒத்தாசையாக இருந்திருப்பான். ஆனால் வபாத் மூலமாக நித்திய சுவனத்தில் பத்து மில்லியன் வருட பிள்ளைகளுடனான குதூகலத்திற்குக் காரணியாகவும் எனது நித்திய விமோசனத்திற்கான ஒரு பரிந்துரையாளனாகவும் மாறியிருக்கின்றான். நிச்சயமாக உடனடியான ஆனால் சந்தேகத்திற்கிடமான ஒரு நலவை இழந்து அதற்குப் பதிலாக சந்தேகத்திற்கிடமற்ற உறுதியான ஆயிரம் நலவுகளை பெற்றுக்கொண்டவன், நோவினைமிக்க வேதனையை அனுபவிக்க மாட்டான்; நம்பிக்கை இழந்தவனாக ஓலமிட மாட்டான்.

## மூன்றாவது குறிப்பு

மரணித்த அந்தப் பிள்ளையானது, அல்-ஹாலிகுர்ரஹீம் ஆகிய அல்லாஹ்வின் ஒரு படைப்பாகும்; ஒரு அடிமையாகும். அத்தோடு வடிவமைப்பின் அடிப்படையில், அவனது ஒரு கலைப்பாடாகவும் உடமையாகவும் இருக்க, தற்காலிகமாக பெற்றோருக்குத் தோழனாக அவர்களது கண்காணிபுக்குக் கீழ் வழங்கப்பட்டிருந்தது. தாய் தந்தையரை அந்தப் பிள்ளைக்கு பணிவிடையாளர்களாக ஆக்கினான். பெற்றோரின் அந்தப் பணிவிடைக்குப் பகரமான ஒரு அன்பளிப்பாக இன்பகரமான ஒரு பாசத்தை வழங்கியிருக்கின்றான். தற்போது

ஆயிரத்தில் தொள்ளாயிரத்துத் தொன்னூற்றொன்பது பங்குகளுக்குச் சொந்தக்காரனான அந்தக் கருணையாலனாகிய படைப்பாளன் தனது ரஹ்மத்துக்கும் ஹிக்மத்துக்கும் ஏற்ற வகையில் அந்தப் பிள்ளையை உனது கையிலிருந்து எடுத்துக் கொண்டால், உனது பணிக்கு முற்றுப் புள்ளி வைத்தால், மேலோட்டமான ஒரு பங்கை வைத்துக் கொண்டு, உண்மையான ஆயிரம் பங்கிற்குச் சொந்தக்காரனானவனை முறைப்பட்டுக் கொள்ளும் விதமாக நம்பிக்கையிழந்து ஒப்பாரி வைத்து அழுவது ஈமான் கொண்டவர்களுக்கு அழகல்ல, பொடுபோக்குக் காரர்களிற்கும் வழிகேடர்களிற்கும் வேண்டுமென்றால் அழகானதாக இருக்கலாம்.

**நான்காவது குறிப்பு**

ஒரு வேளை உலகம் நித்தியமானதாக இருந்து, மனிதன் அதில் நிரந்தரமாகத் தங்கி இருந்து, பிரிவுகளும் நிரந்தரப் பிரிவுகளாக இருந்திருப்பின் துன்பம் பிரவாகிக்கும் முணுமுணுப்புக்களும் நம்பிக்கையிழந்த அவல ஓலங்களும் அர்த்தமுள்ளவையாக இருந்திருக்கும். ஆனால் உண்மை யாதெனில் இந்த உலகம் ஒரு தரிப்பிடமாகும்; மரணித்த பிள்ளை எங்கு நோக்கிப் பயணித்ததோ நீங்களும் நாங்களும் கூட அங்கு செல்ல உள்ளோம். மேலும் இந்த மரணம் அந்தப் பிள்ளைக்கு மாத்திரம் உரித்தானதல்ல, அனைவருக்குமான பொதுப் பாதையாகும். அத்தோடு பிரிவுகள் கூட நிரந்தரமானதல்ல; எதிர்வர உள்ள ஆலமுல் பர்ஸஹிலும் சுவனத்திலும் சந்திக்க உள்ளோம். எனவே اَلْحُكْمُ لِلّٰهِ என்று கூற வேண்டும். அவனே தந்தான், அவனே எடுத்துக் கொண்டான், “அல்ஹம்துலில்லாஹி அலா குல்லி ஹால்” என்று பொறுமையோடு நன்றி செலுத்த வேண்டும்.

**ஐந்தாவது குறிப்பு**

அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் மிகவும் இதமான, மிகவும் அழகான, மிகவும் இனிமையான, மிகவும் கண்குளிர்ச்சியான பிரதிபலிப்புக்களில் ஒன்றாக இருக்கின்ற பாசமானது, ஒளிமயமானதொரு நிவாரணியாகும். காதலை விடவும் அதிக கூர்மை மிக்கதாகும். விரைவாக அல்லாஹ்வை அடைந்து கொள்வதற்கான ஒரு காரணியாகும். உருவகக் காதல்களும், உலகியல் காதல்களும் பல்வேறு அசாத்தியப்பாடுகளுடன் மிகவும் அரிதாகவே உண்மைக் காதலாக பரிணாமம் அடைந்து ரப்புல் ஆலமீனை அடைய வழி செய்கின்றது. ஆனால், பாசமானது, எவ்வித அசாத்தியப்பாடுகளுமின்றி மிகவும் குறுகியதும் மிகவும் தூய்மையானதுமான ஒரு வழியில் உள்ளத்தை அல்லாஹ்வுடன் பிணைக்கும். தாயாகட்டும் தந்தையாகட்டும் தமது பிள்ளைகளை உலகம் போன்று நேசிப்பார்கள். பிள்ளை அவர்களது கையிலிருந்து எடுக்கப்படும் போது, அவர்கள் பாக்கியசாலிகளாகவும் உண்மை முஃமின்களாகவும் இருப்பின், உலகிலிருந்து தமது முகங்களை திருப்பிக் கொள்வார்கள்; உண்மை அருள்பாலிப்பாளனை நோக்கி மீள்வார்கள். “சந்தேகமற உலகம் தற்காலிகமானதாகும்; ஆத்மார்ந்த பற்றுக்கு அருகதையற்றதாகும்.” என்று கூறிவிட்டு பிள்ளை எங்கு சென்றதோ அந்த இடத்தைப் பற்றி அலட்டிக் கொள்ள ஆரம்பிப்பர்; உயர்ந்ததொரு ஆன்மீக அந்தஸ்த்தை அடைந்து கொள்வர்.

பொடுபோக்குக்காரர்களும் வழிகேடர்களும் மேற்படி ஐந்து சத்தியங்களிலும் இருக்கும் நிம்மதிகளையும் சுபசோபனங்களையும் விட்டும் தூரமானவர்களாகும். அவர்களது நிலமை எவ்வளவு வேதனை மிக்கது என்பதற்கு பின்வரும் உதாரணத்தை ஒப்பிட்டுக் கொள்ளுங்கள். மிகவும் நேசத்திற்குரிய அழகிய ஒரே ஒரு பிள்ளையை மரணத்தின் வாசலில் கண்டுவிட்டு, உலகை நிரந்தரமானதாக சித்தரித்துக்கொண்டதன் விளைவாகவும், பொடுபோக்கிலும் வழிகேட்டிலும் மூழ்கி இருப்பதாலும், மரனத்தை சூன்யமாகவும் நித்திய பிரிவாகவும் கருதுவதாலும், மேலும் பொடுபோக்கு மற்றும் வழிகேட்டின் மேலீட்டால் உலகில் பஞ்சணை மெத்தைகளுக்குப் பதிலாக மண்ணறையின் மண்தரையை எண்ணியவனாக அர்ஹமுர்ராஹிமீனால் ஏற்பாடு செய்யப்பட்ட சுவனத்து நந்தவனங்களைச்

சிந்திக்க முடியாதவனாக இருப்பதாலும் எப்படிப்பட்ட பிடிமானமற்றதும் நம்பிக்கையிழந்ததுமான ஒரு நிலமையில் வேதனை அனுபவிப்பான் என்பதை ஒப்பிட்டுக்கொள்ள முடியுமாக இருக்கும். ஆனால் ஈருலக நிம்மதிக்கும் காரணியான ஈமானும் இஸ்லாமும் மு.ஃ.மினைப் பார்த்து “ இந்த மரண வேதனையில் தவிக்கும் உனது பிள்ளையை அல்-ஹாலிகுர்ரஹீம் ஆகிய அல்லாஹ் இந்த அசுத்தமான உலகிலிருந்து விடுவித்து அவன் ஏற்பாடு செய்த சுவனச்சோலைக்கு அழைத்துக் கொண்டான். உனக்கான பரிந்துரையாளனாகவும், நிரந்தரமாகவே உனது பிள்ளையாகவும் ஆக்கிவிடுவான்; பிரிவு நிரந்தரமானதல்ல, எனவே அலட்டிக் கொள்ளாதே; اَلْحُكْمُ لِلّٰهِ * اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُونَ என்று கூறி பொறுமையை கைக்கொள்” என்று கூறும்.

اَلْبَاقِى هُوَ الْبَاقِى

-ஸஈத் நூர்ஸி-

## இரண்டாவது மின்னல்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اِذْ نَادٰى رَبَّهُ اَنِّى مَسَّنِىَ الضُّرُّ وَاَنْتَ اَرْحَمُ الرَّاحِمِينَ

பொறுமைக் கதாநாயகன் அய்யூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இந்த முனாஜாத் ஆனது வினைத்திறன் மிக்கதும் அதே நேரம் பரிசீலிக்கப்பட்டதுமாகும். ஆனால் அந்த வசனத்திலிருந்து நாம் எமது முனாஜாத்தின் போது رَبِّ اِنِّى مَسَّنِىَ الضُّرُّ وَاَنْتَ اَرْحَمُ الرَّاحِمِينَ என்று கூற வேண்டும். அய்யூம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரபலமான சம்பவத்தின் சுருக்கம் பின்வருமாறு.

ஏராளமான புண்களோடும் பிணிகளோடும் மிக நீண்டதொரு காலம் வாழ்ந்த போதிலும் அந்த நோயின் உன்னதமான பிரதிபலன்களை சிந்தித்தவர்களாக பரிபூரண பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள். இறுதியில் அழுகிப்போன புண்களிலிருந்து வெளிப்பட்ட புழுக்கள், இதயத்தையும் நாவையும் தீண்ட ஆரம்பித்த போது இறை துதிக்கும் இறை சிந்தனைக்குமான இடங்களான நாவும் இதயமும் தீண்டப்பட்ட காரணத்தினால் தனது உபூதிய்யத் பணிக்கு இடையூறு ஏற்பட்டு விடுமே என்ற பயத்தில் தனது சுகத்துக்காகவன்றி இறை தியானத்தை தொடர்வதற்காக “யா ரப்! தீங்கு என்னைத் தீண்டி விட்டது; நாவால் உன்னைத் துதிப்பதற்கும் உள்ளத்தால் உன்னை தியானிப்பதற்கும் தடையாக இருக்கின்றது.” என்று முறையிட்டார்கள். றப்புல் ஆலமீன் அந்தக் கலப்படமற்ற, தூய, வேறு நோக்கங்கள் எதுவுமின்றி தனியாக அல்லாஹ்விற்காக மட்டுமே என்றிருந்த அந்த முனாஜாத்தை, முறையீட்டை தனிச்சிறப்புமிக்கதொரு முறையில் ஏற்றுக் கொண்டு பூரண தேகாரோக்கியத்தை வழங்கி தனது விதவிதமான அருள் பாக்கியங்களுக்கு அருகதையுள்ளவராக அவரை ஆக்கினான். ஆம் இந்த மின்னலில் ஐந்து குறிப்புக்கள் காணப்படுகின்றன.

### முதலாவது குறிப்பு

அய்யூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வெளிப்படையான காயங்கள், நோய்களுக்குப் பகரமாக உள்ளத்தையும் ஆன்மாவையும் தீண்டும் உள்ளார்ந்த நோய்கள் எம்மிடம் இருக்கின்றன. அகம் புறமாகவும் புறம் அகமாகவும் புறட்டப்பட்டால் அய்யூப்

அலைஹிஸ்ஸலாம் அவர்களை விட பன்மடங்கு அதிகமான அழுகிய புண்களோடும் வியாதிகளோடும் காட்சியளிப்போம். ஏனெனில் நாம் செய்த ஒவ்வொரு பாவச்செயலும், எமது தலைக்குள் நுழையும் ஒவ்வொரு சந்தேகமும் எமது ஆன்மாவிலும் உள்ளத்திலும் காயங்களை ஏற்படுத்துகின்றன.. அய்யூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது காயங்கள் குறுகிய உலக வாழ்வை அழித்துக் கொண்டிருந்தன. எமது ஆன்மீக ரீதியான காயங்களோ மிக நீண்ட நித்திய வாழ்வை அழித்துக் கொண்டிருக்கின்றன. அய்யூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அந்த முனாஜாத் மீது அன்னாரை விட ஆயிரம் மடங்கு அதிகமான தேவை உடையவர்களாக இருக்கின்றோம். இன்னும், பாரதூரமான விடயம் என்னவெனில், அந்த நபியின் புண்களிலிருந்து தோன்றிய புழுக்கள், இதயத்தையுன் நாவையும் தீண்டியது போன்றே, எமது பாவங்களிலிருந்து தோன்றும் பிணிகளும், அந்தப் பிணிகளிலிருந்து பிரவாகிக்கும் சந்தேகங்கள், கிசிகிசுப்புக்களும் –நஊது பில்லாஹ்- ஈமானின் இருப்பிடமான இதயத்தின் ஆழத்தைத் தீண்டி ஈமானை கலங்கடித்து விடுகின்றன. மேலும் ஈமானின் மொழிபெயர்ப்பாளனாக இருக்கின்ற நாவின் ரூஹானியத்தான இன்பங்களை விட்டும் அதனை மழுங்கச் செய்து திக்ர் அவ்ராத்களின் மீதான வெறுப்பை ஏற்படுத்தி அவற்றை விட்டும் நாவைத் தூரப்படுத்தி விடுகின்றன.

ஆம் பாவங்கள் உள்ளத்தைத் தீண்டி காலம் செல்லச் செல்ல கருமையானதாக மாற்றி இறுதியில் ஈமானின் ஒளி அகலும் வரை கரைபிடிக்கச் செய்கின்றது. ஒவ்வொரு பாவத்தினுள்ளும் கு.்.ப்ரை நோக்கிச் செல்லும் ஒரு பாதை இருக்கின்றது. அந்தப் பாவம் இஸ்தி.்.பார் மூலமாக உடனடியாக அழித்து விடப்படாவிட்டால் புழு அல்ல சிறியதொரு பாம்பாக மாறி உள்ளத்தை தீண்டுகின்றது.

உதாரணத்துக்கு, அவமானத்திற்குறிய ஒரு பாவத்தை மறைவில் செய்யும் ஒரு மனிதன், பிறர் அறிந்து கொள்வதையிட்டும் அதிகம் சங்கடப்படும் போது, மலக்கு மார்களின் இருப்பு அவனுக்கு மிகவும் பாரமாக அமைகின்றது. சிறியதொரு துறும்பைக் கொண்டு அவர்களை நிராகரிக்க விரும்புகின்றான்.

மேலும் உதாரணத்துக்கு, நரக வேதனையை விளைவாகத் தரக் கூடிய பெரியதொரு பாவத்தை செய்யும் ஒரு மனிதன், நரகத்தைக் கொண்டான எச்சரிக்கைகளை செவிமடுக்கும் போதெல்லாம் இஸ்தி.்.பாரைக் கொண்டு அதற்கெதிராக கேடயம் அணியாவிடில், ஆழ் மனதால் நரகம் இல்லாதிருந்திருக்க வேண்டுமே என்று ஆசிக்க ஆரம்பிப்பான். இந்நிலையில், சிறியதொரு சந்தேகம் அல்லது துறும்பு நரகத்தின் இருப்பை நிராகரிப்பதற்கான பலத்தை அவனுக்கு வழங்குகின்றது.

மேலும் உதாரணத்துக்கு, பர்ளான தொழுகையை விட்டுவிட்டு தனது உபூதிய்யத் பணியைப் புறக்கணிக்கும் ஒரு மனிதன் –சிறியதொரு மேற்பார்வையாளரிடமிருந்து சிறியதொரு கடமையை நிறைவேற்றத் தவறும் போது வாங்கும் அரட்டலால் கூட பாதிப்படையும் மனிதன்- ஆதி அந்தங்களின் அரசனான அல்லாஹ்வின் தொடர்ந்தேர்ச்சையான கட்டளைகளுக்கு முன்னால் அந்த பர்ளான தொழுகையில் காட்டும் சோம்பேறித்தனம் அவனுக்கு பெரியதொரு பாதிப்பையும் வேதனையையும் ஏற்படுத்துகின்றது. விளைவாக அந்த வேதனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக "இப்படியொரு உபூதிய்யத் பணி இல்லாதிருந்திருக்க வேண்டுமே" என்று ஆசிப்பான்; உள் மனதால் மொழிவான். அத்தோடு அந்த விருப்பம் அல்லாஹ்வின் மீதான ஒரு வகை வெறுப்புக்குத் தூபமிடும். ஒரு வகை உள்ளார்ந்த நிராகரிப்புக்கு வழிவகுக்கும். இந்த நிலையில் இறை இருப்போடு சம்பந்தப்பட்ட ஒரு சிறு சந்தேகம் உள்ளத்துக்கு வந்தால், உறுதியான ஒரு அத்தாட்சி போன்று அதனைப் பற்றிக்கொள்ள முனைவான். பெரியதொரு அழிவின் வாயில் அவனுக்குத் திறக்கப்படும். அந்த அபாக்கியசாலி தனது நிராகரிப்புக் காரணமாக, உபூதிய்யத் பணியில் ஏற்படும் சிறியதொரு கஷ்டத்திற்குப் பதிலாக, நிராகரிப்பில் இருக்கும் பல் மில்லியன் மடங்கு அதிகமான கஷ்டங்களை உடமையாக்கிக் கொண்டதை அறியாதிருக்கின்றான். நுளம்புக் கடியிலிருந்து தப்பி பாம்பு தீண்டுவதைப்

பொருந்திக் கொள்கிறான். இந்த மூன்று தீங்குகளையும் ஒப்பிட்டு بَلْ رَانَ عَلَى قُلُوبِهِمْ அன்ற மறை வாக்கிலிருக்கும் இரகசியத்தை அறிந்து கொள்ளுங்கள்.

**இரண்டாவது குறிப்பு**

இருபத்தி ஆறாவது வார்த்தையில் கதரின் இரகசியங்கள் பகுதியில் விளக்கப்பட்டது போல் மனிதர்களுக்கு முஸீபத் மற்றும் நோய்களின் போது மூன்று கோணங்களில் ஒப்பாரி வைப்பதற்கான உரிமை கிடையாது.

**முதலாவது கோணம்:** றப்புல் ஆலமீன், மனிதனுக்கு அணிவித்த உடல் என்ற ஆடையை தனது அத்தனை கலைப்பாடுகளினதும் உள்ளடக்கமாக அமைத்துள்ளான். அத்தோடு மனிதனை ஒரு மாதிரியாகப் படைத்துள்ளான், அந்த உடல் என்ற ஆடையை அந்த மாதிரியின் மீது பொருத்துவதற்காக அதில் கூட்டல் குறைத்தல் செய்வான், சில மாற்றங்களை மேற்கொள்வான். இவ்வாறு தனது இன்னோரன்ன நாமங்களின் பிரதிபளிப்பை வெளிக்காட்டுவான். ஷா.ஃபீ நாமம் நோய் நொடிகளை வேண்டுவது போன்றே ரஸ்ஸாக் நாமமும் கூட பசி பட்டினியை வேண்டி நிற்கின்றது. இது போன்ற உதாரணங்களை நீடிக்கலாம். مَالِكُ الْمُلْكِ يَتَصَرَّفُ فِي مُلْكِهِ كَيْفَ يَشَاءُ

**இரண்டாவது கோணம்:** வாழ்க்கையானது நோய்நொடிகள் முஸீபத்கள் மூலமாக தூய்மை அடைகின்றது; பூரணத்துவத்தை எய்துகின்றது; பலம் பெறுகின்றது; முன்னேற்றம் காண்கின்றது; முதிர்ச்சி அடைகின்றது; பிரதிபலன் அளிக்கின்றது. இவ்வாறு நோய் நொடிகளானது வாழ்க்கையின் ஈடேற்றத்திற்காக தமக்கு விதிக்கப்பட்ட பணியை நிறைவேற்றும். ஒரே சீரான சுகபோக வாழ்க்கையானது பரிபூரண நலவான மெய்நிலையை அதாவது வுஜூதை விட பரிபூரண தீங்கான சூன்யத்திற்கு அல்லது இல்லாமைக்கு மிகவும் நெருக்கமானதாகும்; சூன்யத்தை நெருங்கச் செய்யும்.

**மூன்றாவது கோணம்:** இந்த உலக வீடானது சோதனைக் களமும் பணிக்குறிய இடமுமாகும்; அனுபவிப்பதற்கும் கூலிக்குமான இடம் கிடையாது. ஆக நோய்நொடிகளும் முஸீபத்களும், மார்க்கம் சாராதிருப்பதோடு பொறுமையை கைக்க்கொள்கின்ற நிபந்தனைகளுடன் அவனது அந்தப் பணிக்கும் உபூதிய்யத்திற்கும் மிகவுமே உகந்த ஒன்றாக இருப்பதோடு கூடவே அவற்றிட்குப் பலமும் கொடுக்கின்றது. மேலும் நோயோடு கழியும் ஒவ்வொரு மணித்தியாலமும் ஒரு நாள் வணக்கம் என்ற அந்தஸ்த்தை அடைவதால் முறைப்பட்டுக் கொள்வதல்ல நன்றி செலுத்துவது அவசியப்படுகின்றது. ஆம் இபாதத் இரண்டு வகைப்படும். ஒரு பகுதி நேர்முகமானது, மற்றையது மறைமுகமானதாகும். நேர்முகமானது அனைவராலும் அறியப்பட்டதாகும். மறைமுகமானவற்றைப் பொருத்தவரை, நோய்நொடிகள் இழப்புக்களால் பாதிக்கப்பட்டவன், தனது இயலாமை மற்றும் பலவீனத்தை உணர்ந்து இறைஞ்சியவனாக ரப்புர்ரஹீமின் பக்கம் தனது முகத்தைத் திருப்பி, அவனை சிந்தித்து, அவனிடம் கூனிக் குறுகியவனாக தூயதொரு வணக்கத்தில் ஈடுபடுவான். இந்த வணக்கத்தோடு முகஸ்துதி கலக்க முடியாது; தூய்மையானதாகும். பொறுமையோடிருந்து அந்த முஸீபத்தால் கிடைக்கின்ற வெகுமதிகளை சிந்தித்து நன்றி செலுத்தினால், இந்நிலையில் கழியும் ஒவ்வொரு மணித்தியாலமும் ஒரு நாள் இபாதத் அந்தஸ்த்தை அடையும். குறுகியதொரு வாழ்வு நீண்டதொரு வாழ்வாக மாறும். சிலபோது ஒரு நிமிடம் கூட ஒரு நாள் இபாதத் அந்தஸ்த்தை அடைகின்றது. ஹா.ஃபிஸ் அஹமத் என்ற பெயரைக்கொண்ட எனது ஒரு மறுமைச் சகோதரனைத் தொற்றியிருந்த பயங்கரமானதொரு நோயைப் பற்றி அதிகமாக அலட்டிக்கொண்டிருந்தேன். அப்போது எனது உள்ளத்தில் பின்வருமாறு நினைவூட்டப்பட்டது. “அன்னாருக்கு வாழ்த்துக் கூறு, அவரது ஒவ்வொரு நிமிடமும் ஒரு நாள் இபாதத் அந்தஸ்த்தை அடைந்து கொண்டிருக்கின்றது.” உண்மையில் அந்தச் சகோதரன் பொறுமையோடு நன்றி செலுத்துபவனாக இருந்தான்.

### மூன்றாவது குறிப்பு

ரிஸாலே-இ நூரிலிருக்கும் சில வார்த்தைகளில் தெளிவு படுத்தப்பட்டதைப் போன்று, ஒவ்வொரு மனிதனும் தனது இறந்தகால வாழ்வை நினைவுபடுத்திப் பார்த்தால் உள்ளத்திலும் நாவிலுமிருந்து ஒன்றோ "ஓஹோ!" அல்லது "ஆஹா!" என்ற எதிரொலிகள் வெளிப்படும். அதாவது ஒன்றோ கைசேதப்பட்டுக் கொள்வான் அல்லது "அல்ஹம்துலில்லாஹ்" என்பான். "கைசேதமே!" என்று கூற வைப்பது, கடந்த கால இன்பங்களின் முடிவு மற்றும் பிரிவிலிருந்து பிரவாகமெடுக்கும் ஆன்மீக வேதனைகளாகும். ஏனெனில் இன்பங்களின் முடிவு வேதனையாகும். சிலபோது கணப்பொழுதேயான ஒரு இன்பம் சதாவும் வேதனை அளித்துக்கொண்டிருக்கும். அந்த இன்பத்தைப் பற்றி சிந்திப்பது அந்த வேதனையைக் கிளறி கைசேதத்தை ஊற்றெடுக்கச் செய்யும். அவ்வாறே, கடந்த வாழ்க்கையின் தற்காலிக வேதனைகளின் முடிவிலிருந்து தோற்றமெடுக்கும் ஆத்ம இன்பம் சதாவும் "அல்ஹம்துலில்லாஹ்" சொல்ல வைக்கும். இந்த இயல்பான நிலையோடு கூடவே முஸீபத்களின் விளைவுகளான நன்மைகள் மற்றும் மறுமைப் பெறுபேறுகள் காரணமாக முஸீபத்தோடு கழியும் இந்தக் குறுகிய பொழுதுகள் நீண்ட பொழுதுகளாக பரிணாமமடைகின்றது என்பதை சிந்தித்தால் பொறுமைக்கு அப்பால் நன்றி செலுத்துவான். "அல்ஹம்துலில்லாஹி அலா குல்லிஹால் ஸிவல் குஃப்ரி வத்தலால்" மொழிவது அவசியமாகின்றது. பிரபலமான ஒரு வார்த்தை இருக்கின்றது, "முஸீபத்துடைய காலம் நீண்ட்தாகும்." ஆம் முஸீபத்துடைய காலம் நீளமானதாகும். ஆனால் மனிதர்களின் பொதுவான சிந்தனை வழக்கில் உள்ளது போன்று கஷ்டகரமானது என்பதால் நீளமானது அல்ல, மாறாக நீண்டதொரு வாழ்க்கை போன்ற வாழ்க்கைப் பெறுபேறுகளையும் நீண்ட வாழ்க்கைப் பாடங்களையும் கற்றுத்தருவதால் நீளமானதாகும்.

### நான்காவது குறிப்பு

இருபத்தி ஓராவது வார்த்தையின் முதற் படித்தரத்தில் தெளிவுபடுத்தப்பட்டதற்கினங்க அல்லாஹ்வால் மனிதனுக்கு வழங்கப்பட்ட பொறுமை என்ற ஆயுதம், மாயைகளிற்காக சிதறடிக்கப்படாவிடில் அனைத்து விதமான முஸீபத்களையும் எதிர்கொள்வதற்கு அதுவே போதுமானதாகும். ஆனால் மனிதன் மாயைகளின் அழுத்தத்திற்குட்பட்டு பொடுபோக்குத்தன மேலீட்டால் தனது தற்காலிக வாழ்வை நித்தியமானதாக சித்தரித்துக் கொண்டதன் விளைவாக பொறுமை என்ற ஆயுதத்தை கடந்த மற்றும் எதிர்காலங்களில் சிதறடிப்பதன் காரணமாக, உடனடி முஸீபத்தை எதிர்கொள்வதற்கு கைவசமிருக்கும் பொறுமை என்ற ஆயுதம் கட்டுப்படியாகாது; முறைப்பட்டுக் கொள்ள ஆரம்பிப்பான்; (முடியவே முடியாது) வல்லோன் அல்லாஹ்வை மனிதர்களிடம் முறைப்பட்டுக் கொள்வான். அதாவது எந்த வித உரிமையுமின்றி புத்தி பேதலித்தவனைப் போல் முறைப்பட்டுக் கொண்டு பொறுமை இன்மையை வெளிக்காட்டுவான். ஏனெனில், கடந்த ஒவ்வொரு நாளும் முஸீபத் உடையதாக இருந்திருப்பின் அதனால் ஏற்பட்ட கஷ்டங்கள் கடந்து அவை விட்டுச் சென்ற நிம்மதி எஞ்சியிருக்கின்றது; வேதனைகள் அகன்று அதன் முடிவால் ஏற்பட்ட இன்பம் எஞ்சியிருக்கின்றது; நோவினைகள் அகன்று நன்மைகள் எஞ்சியிருக்கின்றன. ஆகவே இதற்காக முறைப்பட்டுக்கொள்வதல்ல மாறாக முகம் மலர நன்றி செலுத்துவது அவசியப்படுகின்றது. முஸீபத்களைத் தூற்றித் தீர்ப்பதல்ல, பதிலாக நேசம் கொள்வது அவசியப்படுகின்றது. அவனுடைய அந்தக் கடந்து சென்ற தற்காலிக வாழ்க்கை முஸீபத் காரணமாக நித்தியமானதும் மகிழ்ச்சிகரமானதுமான ஒரு வாழ்க்கையாகப் பரிணாமமடைந்து விட்டன. இவ்வாறிருக்க, மாயைகளைக் கொண்டு அதிலிருந்த வேதனைகளைச் சிந்தித்து ஒரு பகுதி பொறுமையை அவைகளுக்கெதிராக விரயப்படுத்துவது புத்திபேதலித்த நிலையாகும். அதே போன்று எதிர்வர இருக்கும் நாட்களைப் பொருத்தவரை, அவற்றை நாம் இன்னும் அடைந்து கொள்ளவில்லை, அந்த நாட்களில் சந்திக்கப்போகும் நோய்நொடிகள், முஸீபத்களை இப்போதிலிருந்தே சிந்தித்து பொறுமையின்மையை வெளிக்காட்டுவதும் முறைப்பட்டுக்கொள்வதும் மடத்தனமாகும். "நாளை பட்டினி கிடக்க வேண்டி வருமே, தாகம் எடுக்குமே என்பதற்காக, இன்று இடைவிடாது நீர் அருந்துவதும்

சாப்பிடுவதும் எப்படிப்பட்ட மடத்தனமோ, எதிர்காலத்தில் வர இருக்கும், ஆனால் தற்போது உன்னளவில் சூன்யத்திலிருக்கும் முஸீபத் மற்றும் நோய்நொடிகளை எண்ணி தற்போதிலிருந்தே வேதனையை வரவழைத்துக்கொண்டு, பொறுமையின்மையோடு எவ்வித கட்டுப்பாடுமின்றி தனக்குத்தானே அநியாயம் இழைத்துக்கொள்வதும் அப்படிப்பட்டதொரு மடத்தனமாகும். இவர்கள் தம் மீது அன்பும் பரிவும் செலுத்தப்படுவதற்கான தகுதியை இழந்து விடுகின்றனர்.

**சுருக்கமாக**

ஷுக்ர், அதாவது அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதானது, அருள்களில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதைப் போன்றே முறைப்பட்டுக்கொள்வதானது, முஸீபத்களை இன்னுமின்னும் அதிகரிக்கச் செய்வதோடு கருணை செலுத்தப்படுவதற்கான அருகதையை இல்லாமலாக்கி விடும்.

முதலாம் உலகப் போரின் முதல் வருடம், எர்ஜுரும் நகரில் கண்ணியத்திற்குறிய ஒருவர் மிகவும் பயங்கரமானதொரு நோய்க்கு ஆட்பட்டிருந்தார். அன்னாரை சுகம் விசாரிப்பதற்காக அருகில் சென்ற போது "நூறு இறவுகளாக நான் தலையனையில் தலைசாய்த்து உறங்க முடியாதவனாக இருக்கின்றேன்." என்று மிகவும் வருத்தத்தோடு முறைப்பட்டுக்கொண்டார். நானும் கூட மிகவும் கவலைப்பட்டேன். பின்னர் உடனே நினைவுக்கு வந்த பின்வரும் விடயத்தைக் கூறினேன்.. "சகோதரா! கடந்து சென்ற கஷ்டகரமான நூறு நாட்களும் தற்போது மகிழ்ச்சிகரமான நூறு நாட்களாக பரிணாமமடைந்து விட்டன. அவற்றை எண்ணி முறைப்பட்டுக் கொள்வதல்ல மாறாக அவற்றுக்காக நன்றி செலுத்து. எதிர்வரும் நாட்களோ உண்மையில் உன்னை இன்னும் அடையவில்லை. உனது றப்பான ரஹ்மானுர்ரஹீமுடைய ரஹ்மத்தின் மீது நம்பிக்கை வைத்து, அடி வாங்க முன் அழுவதை நிறுத்திக்கொள்! இல்லாமையை எண்ணி அஞ்சாதே! மெய்நிலையில் இல்லாத ஒன்றுக்கு மாயை நிறத்தைத் தெளித்து மெய்நிலைக்கு இழுத்து வராதே! இந்த மணித்தியாலத்தை மாத்திரம் சிந்தி! உன்னிடமிருக்கும் பொறுமை ஆயுதம் அதற்குப் போதுமானதாகும். தலை குழம்பிய ஒரு தளபதி இடப்பக்கத்திலிருக்கும் எதிரிப்படையை வீழ்த்த கைவசமிருக்கும் படையணி போதுமானதாக இருக்கும் போது என்றோ வலப்புறமாக வர இருக்கும் ஒரு எதிர்ப்படைக்காக மொத்த படையையும் வலமாகவும் இடமாகவும் சிதறடித்து மையத்தைப் பலவீனப்படுத்தி, இறுதியில் எதிரி சிறியதொரு படையுடன் மையத்தை சின்னாபின்னப்படுத்தக் காரணமாக அமைகிறான். இதைப் போன்று நீயும் செயற்படாதே!" என்றேன். மேலும் கூறினேன் "சகோதரா, நீயும் இந்தத் தளபதியின் நிலைக்கு வீழ்ந்து விடாதே, ஒட்டுமொத்த பலத்தையும் இந்த மணித்தியாலத்திற்கெதிராக அதை மிகைப்பதற்காகப் பிரயோகி! அல்லாஹ்வின் ரஹ்மத்தையும், மறுமைப் பிரதிபலன்களையும் தற்காலிகமான குறுகிய ஆயுளை நீண்ட, நித்திய ஆயுளாக மாற்றியதையும் சிந்தி! இந்த வேதனை சொட்டும் முறைப்பாட்டுக்குப் பதிலாக ஆத்ம திருப்தியோடு நன்றி செலுத்து..!" அன்னாரும் பூரண ஆறுதல் பெற்றவராக "அல்ஹம்துலில்லாஹ், எனது நோய் பத்திலிருந்து ஒன்றாகக் குறைந்து விட்டது" என்று கூறினார்.

**ஐந்தாவது குறிப்பு: மூன்று விடயங்களாகும்.**

**முதலாவது விடயம்:** அசலானதும், பயங்கரமானதுமான முஸீபத் மார்க்கத்துக்கு வரும் முஸீபத் ஆகும். மார்க்கத்துக்கு வரக்கூடிய முஸீபத்களிலிருந்து பாதுகாப்புத் தேடி மன்றாடுவது அவசியமாகும். மறுபுறம் மார்க்கம் சாராத முஸீபத்கள் யதார்த்தத்தில் முஸீபத் கிடையாது. அதன் ஒரு பகுதி இறை எச்சரிக்கைகளாகும். பிறர் வளவுக்குள் சென்று மேயும் ஆடுகளை நோக்கி அதன் எஜமான் கல் எறியும் போது, அந்த ஆடுகள், நாம் எல்லை மீறி விட்டோம், இது எம்மைப் பாதுகாப்பதற்கான எச்சரிக்கையாகும் என்பதை உணர்ந்து உடனடியாக திரும்பி விடுகின்றன. அதே போன்றே வெளிப்படையான சில முஸீபத்களானது, அல்லாஹ்வின் எச்சரிக்கையும் விளிப்பூட்டலுமாகும். அதில் ஒரு பகுதியானது பாவப்பரிகாரமாகும், மற்றுமொரு பகுதியானது பொடுபோக்குத்தனத்தை களைந்து

மனிதனுக்கேயான இயலாமை, பலவீனம் என்பவற்றை உணர்த்தி ஒரு வகை நிம்மதியை வழங்குவதாகும். முஸீபத்களில் நோய்நொடிகள் உள்ளடங்கிய பகுதி, முன்னர் குறிப்பிடப்பட்டதைப் போன்று முஸீபத் கிடையாது, மாறாக றப்பின் உன் மீதான ஆதரவாகும், உன்னை தூய்மைப்படுத்துவதாகும். அறிவிப்புக்களில் ''முதிர்ந்த ஒரு மரத்தை குலுக்கும் போது இலைகள் உதிர்வதைப் போன்றே இருமலின் அதிர்வால் பாவங்களும் உதிர்ந்து விழுகின்றன.'' என்று வருகின்றது.

அய்யூப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது முனாஜாத்தில் தனது ந.்.ப்ஸை திருப்திப்படுத்துவதற்காக துஆ செய்யவில்லை. மாறாக நாவால் திக்ரும், உள்ளத்தால் இறை துதியும் தடைப்பட்ட போது உபூதிய்யத்தை செவ்வனே செய்வதற்காக நிவாரணம் வேண்டினார். நாம் அந்த முனாஜாத்தின் போது முதல் நோக்கமாக பாவங்களால் ஏற்படும் ஆன்மா, ரூஹ் சார்ந்த நோய்களுக்கான நிவாரணத்திற்கு நிய்யத் வைத்துக்கொள்ள வேண்டும். உபூதிய்யத் தடைப்படக் காரணமாக இருக்கின்ற பௌதீக நோய்களுக்காக நிவாரணம் கேட்டு மன்றாடலாம். ஆனால் உடைந்து நொறுங்கிப் போய் முறைப்பட்டுக்கொள்ளும் விதமாக அன்றி உதவி தேடும் விதமாகவே மன்றாட வேண்டும். எந்தவித சந்தேகமுமின்றி அவனது ருபூபிய்யத்தை பொருந்திக் கொண்டோம். அவ்வாறெனில் அவன் அந்த ருபூபிய்யத்தின் அடிப்படையில் வழங்கியவற்றையும் பொருந்திக்கொள்ள வேண்டும். கதரை எதிர்ப்பதை வெளிக்காட்டும் விதமாக ''ஆஹ்'', ''ஊஹ்'' என்று முறைப்பட்டுக்கொள்வது, ஒரு வகையில் கதரை விமர்சிப்பதாகும், ரஹீமிய்யத்தை குற்றம் சாட்டுவதாகும். கதரை விமர்சிப்பவன் தலையை சம்மட்டியில் அடித்து உடைத்துக்கொண்டவன் போலாவான். ரஹ்மத்தை குற்றம் சாட்டுபவன் ரஹ்மத்திலிருந்தும் தூரமாவான். உடைந்த கையோடு பலிதீர்ப்பதற்காக அதே கையைப் பிரயோகிப்பது, கையிலுள்ள உடைவை அதிகரிக்கச் செய்வதைப் போன்றே முஸீபத்திற்கு ஆட்பட்ட மனிதன், அதைப் பற்றி முறைப்பட்டுக்கொண்டு வீண் மாயைகளை கட்டியெழுப்புவது அந்த முஸீபத்தை இரட்டிப்பாக்கும்.

**இரண்டாவது விடயம்:** சட ரீதியான முஸீபத்கள் பெரிது படுத்துகின்ற அளவு பெரிதாகும், சிறிது படுத்துகின்ற அளவு சிறிதாகும். உதாரணமாக நடு நிசியில் மனிதனின் கண்களுக்கு ஒரு மாயை தென்படும், அதை அவன் அலட்டிக் கொள்கின்ற அளவுக்கு ஊதிப் பெருக்கும், அலட்டிக்கொள்ளாவிடில் மறைந்து விடும். பிரம்மை காரணமாக அந்த முஸீபத் உடலைத் தாண்டி உள்ளத்திலும் வேறூண்டும்; ஒரு ஆன்மீக முஸீபத்தை விளைவாகத் தரும். அந்த மாயையை, தவக்குல் மூலமாகவும் விதியைப் பொருந்திக்கொள்வதன் மூலமாகவும் அகற்றி விட்டால் சடரீதியான அந்த முஸீபத் வேரறுந்த மரம் போல் காய்ந்து உக்கிப்போய் விடும். இந்த உண்மையை தெளிவுபடுத்துவதற்காக ஒரு சமயம் பின்வருமாறு கூறியிருந்தேன்.

ஓ நாதியற்றவனே! விட்டு விடு அவல ஓலங்களை, அவலங்களை தவக்குலால் எதிர்கொள்!

அவல ஓலங்கள் அவலத்திற்குள் அவலமாகும், துன்பத்திற்குள் துன்பமாகும், அறிந்து கொள்!

அவலம் அளித்தவனை அறிவாயெனில், அவலங்கள், நிம்மதியும் இன்பமும் சுமந்து வரும், அறிந்துகொள்!

அறியான் எனில், அகிலம் முழுவதும், அவலத்தால் நிறைந்ததாகும், அறிந்துகொள்!

அகிலம் நிறை அவலங்கள் தலை மீதிருக்க, அற்ப அவலத்திற்காக ஏது இந்த ஓலங்கள்!?

ஆக, தவக்குலோடு அவலத்தின் முகத்தில் புன்னகையை எறி! ஆக அதுவும் புன்னகைக்கட்டும்; புன்னகைத்து புன்னகைக்குள் புதைந்து விடட்டும்.

மோதலின் போது ஒரு பயங்கர எதிரியைப் பார்த்து புன்னகைக்கும் போது பரஸ்பர குரோதம் பரஸ்பர புரிந்துணர்வுக்கும், வெறுப்பு அந்நியோன்யத்திற்கும் வழிவகுக்கும்,

குரோதம் அருகி அழிந்து விடும். தவக்குலோடு முஸீபத்களை எதிர்கொள்வதும் இதைப் போன்று தான்.

**மூன்றாவது விடயம்:** ஒவ்வொரு காலத்துக்கும் என்று ஒரு விதி இருக்கின்றது. பொடுபோக்கு மேலோங்கியிருக்கும் இந்தக் காலத்தில் முஸீபத்கள் தமது வடிவத்தை மாற்றிக் கொண்டுள்ளன. சில போது சிலருக்கு வரும் துன்பங்கள் துன்பங்களே அல்ல, மாறாக ஒரு இறை அருட்கொடையாகும். நான் இந்த யுகத்தில், நோய்நொடிகளோடும் இன்ன பிற துன்பதுயரங்களோடும் வாழும் முஸீபத்திற்குள்ளானவர்களை (ஆனால் அந்த முஸீபத் மார்க்கத்தை தீண்டாதிருக்கும் நிபந்தனையுடன்) பாக்கியசாலிகளாகக் காண்பதால், நோய்நொடிகள், துன்பதுயரங்களிற்கு எதிரானவாக இருப்பதற்கான எந்த வித ஆதாரமும் என்னிடத்தில் இல்லை. மேலும் அவர்களுக்காக வருந்தும் உணர்வு எனக்கு வருவதுமில்லை. ஏனெனில் எந்தவொரு நோயாளியான இளைஞன் அருகில் வந்தாலும் சம தரத்திலுள்ள பிற இளைஞர்களை விடவும் அதிகமாக மார்க்கக் கடமைகளோடும் மறுமையோடும் பிணைப்போடிருப்பதை அவதானித்தேன். இதிலிருந்து இப்படியானவர்களுக்கு வரும் நோய்கள் முஸீபத் அன்றி ஒரு வகை இறை அருளாகும் என்பதை அறிந்து கொண்டேன். ஏனெனில் அந்த நோய் அவரது உலகியல் ரீதியான தற்காலிக குறுகிய வாழ்க்கைக்கு ஒரு கஷ்டத்தை அளித்தாலும் அவனது நித்திய வாழ்விற்கு வளமளிக்கின்றது; ஒரு வகை இபாதத் அந்தஸ்த்தை அடைகின்றது. ஒரு வேளை சுகம் பெறுவானாயின், இளமையின் போதையில் காலத்தின் படுபாதகங்களிற்கு ஆட்பட்டு நிச்சயமாக நோயின் போதான நிலமையை பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலமைக்குத் தள்ளப்படுவான்.. சில வேளை படுபாதகங்களில் மூழ்கி விடுவான்..

**இறுதியாக..**

நித்திய இரட்சகன் தனது முடிவில்லாத குத்ரத்தையும் எல்லையில்லாத ரஹ்மத்தையும் காட்டுவதற்காக மனிதனோடு முடிவில்லாத இயலாமையையும் எல்லையில்லாத பலவீனத்தையும் ஒட்டி வைத்துள்ளான். மேலும் தனது நாமங்களின் பிரதிபலிப்புக்களையும் எண்ணற்ற கலைப்பாடுகளையும் காட்டுவதற்காக மனிதனை எண்ணற்ற கோணங்களிலிருந்து வேதனை அனுபவிக்க முடியுமானதும் அதே நேரம் எண்ணற்ற கோணங்களிலிருந்து இன்பங்களை அனுபவிக்க முடியுமானதுமான ஒரு இயந்திரமாகப் படைத்துள்ளான். மேலும் அந்த மனித இயந்திரத்தில் நூற்றுக்கணக்கான உதிரிப்பாகங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றினதும் வேதனைகள் வேறு, இன்பங்கள் வேறு, பணிகள் வேறு, பிரதிபலன்கள் வேறாகும். சரியாக இன்ஸானுல் அக்பர், அதாவது மிகப்பெரிய மனிதனான பிரபஞ்சத்தில் பிரதிபலிக்கும் அனைத்து இறை நாமங்களும், ஒட்டுமொத்தமாக, ஆலமுல் அஸ்ஃகர் அதாவது சிறிதுபடுத்தப்பட்ட பிரபஞ்சமான மனிதனில் கூட பிரதிபலிக்கின்றன. இங்கு சுகம், ஆரோக்கியம், இன்பம் போன்ற பயனுள்ள நிகழ்வுகள் நன்றியை வெளிப்படுத்த வைத்து அந்த இயந்திரத்தை பல கோணங்களில் தனது பணியை செவ்வனே செய்வதற்கான உந்துதலை அளிக்கின்றது. அதாவது மனிதனை ஒரு ஷுக்ர் தொழிற்சாலையாக ஆக்கி விடுகின்றது. இவ்வாறே முஸீபத்கள், நோய்நொடிகள், வேதனைகள் மற்றும் இன்னபிற குறைபாடுகள் ஊடாக அந்த இயந்திரத்தின் வேறு சில சக்கரங்கள் தொழிற்பட ஆரம்பிக்கும். மனித இயல்பில் குடிகொண்டிருக்கும் இயலாமை, பலவீனம், வக்கற்ற தன்மை போன்ற கணியங்களை தொழிற்பாட்டுக்குட்படுத்தும். இவ்வாறே தனி ஒரு நாவிற்குப் பதிலாக ஒவ்வொரு அவயங்களினதும் நாவுகளால் இறைஞ்சல், உதவிதேடல் போன்ற உன்னத பணிகளை செய்விக்கும். ஏதோ, மனிதன் அந்தக் குறைபாடுகளுடன், விதவிதமான ஆயிரக்கணக்கான எழுதுகோல்கள் உள்ளடங்களான நடமாடும் ஒரு எழுதுகோலாக மாறுகிறான் போலும்.. எனவே இதன் மூலமாக வாழ்க்கைப் பக்கங்களில் அல்லது பட்டோலையில் தனது வாழ்க்கையின் விதிகளையும் வினைகளையும் எழுதி, இறை நாமங்களிற்கான ஒரு அறிவிப்புப் பதாகையாக அதனை ஆக்குவான். மேலும் எவ்வித குறைகளையும் விட்டுத் தூய்மையான சுப்ஹான் ஆகிய அல்லாஹ் உடைய அழகியதொரு கஸீதா என்ற அந்தஸ்த்தை அடைந்து, தனது வாழ்வின் இயல்பான பணியை சமர்பித்தவனாவான்.

**ரஸாஇலுன் நூரை வாசிப்பதில் அதிக ஆர்வம் கொண்ட, அவற்றை கற்றுக்கொள்ளும் வகுப்புக்களிலிருந்து விளித்துக் கொண்ட ஒரு வைத்தியருக்கு எழுதப்பட்ட கடிதம்.**

வாழ்த்துக்கள்! தனது சொந்த நோயை இனங்கண்டுகொள்ள முடியுமான பாக்கியசாலியான வைத்தியரே! கண்ணியத்திற்குறிய உயிர்த் தோழனே!

உங்களது பரபரப்பான கடிதத்தில் காணமுடியுமாக உள்ள உங்கள் ஆன்மாவின் விளிப்பு நிலையானது வாழ்த்துக்களுக்கு அருகதையுள்ளதாகும். மனிதர்களே, அறிந்து கொள்ளுங்கள்! படைப்பினங்களுக்கு மத்தியில் மிகவுமே பெறுமதி மிக்கது ஹயாத், அதாவது வாழ்வாகும். மேலும் பணிகளில் மிகவும் பெறுமதி வாய்ந்தது வாழ்விற்குப் பணிவிடை செய்வதாகும். மேலும் வாழ்விற்காகச் செய்யப்படும் பணிகளுள் மிகவுமே பெறுமதி வாய்ந்தது தற்காலிக வாழ்வை நித்திய வாழ்வாக பரிணமிக்கச் செய்வதற்காக உழைப்பதாகும். இந்த வாழ்வின் மொத்த பெறுமதியும் முக்கியத்துவமும் நித்திய வாழ்விற்கான விதையாகவும் விளைநிலமாகவும் இருக்கின்ற காரணத்தினாலாகும். மாறாக நித்திய வாழ்வை நஞ்சூட்டி அழிக்கக் கூடிய விதமாக இந்த தற்காலிக வாழ்வை நோக்கி ஒட்டுமொத்த கவனத்தையும் திருப்புவது; மின்னி அணையும் ஒரு மின்மினியை நித்திய சூரியனிற்குப் பகரமாக தெரிவு செய்வதைப் போன்றதொரு பைத்தியகாரத்தனமாகும்.

யதார்த்தின் கண்ணோட்டத்தில் அனைவரையும் விட அதிகம் நோய்வாய்ப்படவர்கள் சடத்திற்கு அப்பால் எதையுமே சிந்திக்கத் தெரியாத பொடுபோக்குக்கார வைத்தியர்களேயாகும். ஆகவே புனிதமான மருந்தகமான குர்ஆனின் மருந்தகத்திலிருந்து சஞ்சீவி போன்ற ஈமானிய மருந்துகளை பெற்றுக் கொள்வார்களாயின் தம்மைத் தொற்றியிருக்கும் வியாதிகளுடன் கூடவே மனித குலத்தை பீடித்திருக்கும் நோய்களுக்கும் உண்மையான நிவாரணமளிப்பார்கள், இன்ஷா அல்லாஹ். உங்களது இந்த விளிப்பு உங்களிடமிருக்கும் இப்படிப்பட்ட வியாதிகளுக்கான ஒரு நிவாரணியாக இருக்கப்போவதோடு கூடவே, உங்களைக் கூட பிற வைத்தியர்களின் நோய்களுக்கான ஒரு நிவாரணியாக ஆக்கும்.

மேலும் நம்பிக்கையிழந்து வாழ்க்கையில் பிடிப்பற்றிருக்கும் ஒரு நோயாளிக்கு ஆன்மிக ரீதியான ஒரு தேற்றம் சில போது ஆயிரம் மருந்துகளை விட மிகவும் ஏற்றமானது என்பதை அறிவீர்கள். உண்மை நிலை இதுவென்பதால் சடவாத சகதியில் மூழ்கியிருக்கும் ஒரு வைத்தியன், அந்த நாதியற்ற நோயாளியின் வேதனை மிக்க நம்பிக்கையீனத்தைச் சூழ இன்னுமொரு இருண்ட படலத்தையே ஏற்படுத்துவான். இன்ஷா அல்லாஹ் உங்களது இந்த விளிப்பானது உங்களை இப்படிப்பட்ட நாதியற்ற நோயாளிகளுக்கான ஒரு தேற்றக் காரணியாகவும், ஒளியைச் சுமந்த ஒரு வைத்தியனாகவும் மாற்றும்.

மேலும் வாழ்க்கை குறுகியதாகும், ஆனால் கட்டாயமான பணிகளோ மிக அதிகமானதாகும் என்பதையும் அறிவீர்கள். நீங்களும் என்னைப் போன்று மண்டையை ஒரு முறை பரிசீலித்துப் பார்த்தால், நீங்கள் அறிந்து வைத்திருப்பவற்றினுள் அதிகமானவை, அவசியமும் பிரயோசனமும் முக்கியத்துவமுமற்ற விறகுக்கட்டைகள் போன்ற வெற்றுச் சடங்கள் என்பதைக் கண்டு கொள்வீர்கள். ஏனெனில் நானும் பரிசீலித்துப் பார்த்த போது ஏராளமான அநாவசியமான விடயங்களைக் கண்டு கொண்டேன். ஆம் இந்த விஞ்ஞானவியல் தகவல்கள், தத்துவார்த்த அறிவுகள் என்பவற்றை, பிரயோசனமுள்ளதாகவும், ஒளிமயமானதாகவும், ஆத்மார்ந்த உயிர்ப்பு மிக்கதாகவும் மாற்றுவதற்கான வழியைத் தேடுவது அவசியாமாகும். நீங்களும்ம் கூட சத்திய இரட்சகனிடமிருந்து ஒரு உதிப்பை வேண்டுவீர்களாக, ஆக உங்களது சிந்தனைகள் ஹகீமு துல்ஜலால் ஆகிய அல்லாஹ்வை நோக்கித் திரும்பட்டும்; அந்த விறகுக்கட்டைகள் நெருப்பு மூட்டப்பட்டு ஒளிமயமானதாக ஆகட்டும்; அவசியமற்ற விஞ்ஞானவியல் தகவல்கள் பெறுமதி மிக்க இறையியல் அறிவுகளாக அதாவது இல்முல் இலாஹ் ஆக மாறட்டும்.

புத்தி தெளிந்த தோழனே! விஞ்ஞான உலகில் ஈமானின் ஒளிகளிற்கும் குர்ஆனிய இரகசியங்களிற்குமான தேவையை பசி பிடித்ததைப் போன்று உணர்ந்து கொள்ளும் விடயத்தில் எனது மாணவர்களுல் ஒருவரான "ஹலூஸியை ஒத்த நபர்கள் முன்வர வேண்டும் என்று நீண்ட நாட்களாக எனது உள்ளத்தில் ஒரு ஆசை இருந்தது. கூடவே ரஸாஇலின் வார்த்தைகள் உங்கள் மனசாட்சியோடு பேசக் கூடியவையாகும். ஒவ்வொரு தனி வார்த்தையும் என்னிடமிருந்து அல்ல, மாறாக குர்ஆனின் அத்தாட்சிகளில் இருந்து உங்களுக்கான ஒரு கடிதமாகும்; குர்ஆனின் புனிதமிகு மருந்தகத்திலிருந்து உங்களுக்கான ஒரு நிவாரணியாகும். மறைவில் நேருக்கு நேர் சந்திப்பதைப் போன்றதொரு சந்திப்புக் கூடத்தை அவற்றோடு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மேலும் விரும்பிய நேரம் எனக்குக் கடிதம் எழுதுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். நான் பதில் எழுதாவிட்டாலும் நொந்து கொள்ள வேண்டாம்! ஆரம்பம் முதலே மிகக்குறைவாகவே கடிதம் எழுதுகிறேன். எந்த அளவுக்கெனில் கடந்த மூன்று வருடங்களாக எனது சகோதரனின் ஏராளமான கடிதங்களுக்குப் பதிலாக ஒரே ஒரு பதில் கடிதமே எழுதினேன்.

-ஸஈத் நூர்ஸி-